# பரத நாட்டியம்

தரம்

# 6

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.lk
info@ni.lk

# பரத நாட்டியம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

**(2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.)**

**அழகியற்கல்வித் துறை,**
**மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**
**www.nie.lk**
**info@ni.lk**

பரத நாட்டியம்
ஆசிரியர் கைந்நூல்
தரம் - 6
பாடத்திட்டம் - 2015

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

முதற் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம

அழகியல் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

***அச்சுப் பதிப்பு***

தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பெற்றது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்பெறும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் வழியாக இது அறிமுகப்படுத்தப்பெற்றது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்ப்படுத்தப்பட உள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின்போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பெற்று, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட் டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிவு நிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பெற்ற பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப்படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பெற்ற பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பெற்ற பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங் களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்,**
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கும் கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர் களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும் :** **கல்விசார் அலுவல்கள் சபை**
தேசிய கல்வி நிறுவகம்

**பாட நிபுணத்துவ ஆலோசனை:** **திரு. சுதத் சமரசிங்ஹ**
பணிப்பாளர் - அழகியற்துறை

**பாட இணைப்பாக்கம்:** **திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்**
செயற்றிட்ட தலைவர்
அழகியற் கல்வித்துறை

**எழுத்தாளர் குழு:**
**(உள்வாரி)** **திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்**
செயற்றிட்ட தலைவர்
அழகியற் கல்வித்துறை

(வெளிவாரி) **திருமதி தயானந்தி விமலச்சந்திரன்**
ஆசிரிய ஆலோசகர்
மேல் மாகாணம்.

**திருமதி பாரதி சிவயோகநாதன்**
ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு.

**திருமதி சுபாசினி சர்வேஸ்வரன்**
ஆசிரியை
கொ.்.கணபதி இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு.

**மொழி மேற்பார்வை:** **திரு.து.இராஜேந்திரம்**
ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்
திறந்த பல்கலைக் கழகம்.

**கணனி கோர்ப்பும் வடிவமைப்பும்:** **செல்வி க.தாட்ஷாயனி**

**அட்டைப்பட வடிவமைப்பு:** **திரு. ரவீந்ர தேநுவர**

## ஆசிரியர் கைந்நூலைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்.

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 6 இற்கான பரதநாட்டிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமாக நடாத்துவதற்கு துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் கைநூல் உங்களிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனை பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

- ❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக நேர முகாமை செய்தல்.

- ❖ 5 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறை தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்த தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விரைந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ தாமே ஒரு செயற்பாடுகளை செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனமெடுப்பது பயனுடையதாகும்.
  - ➢ அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப் பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரை பாடத்தின் பால் ஈர்த்தல். முன்னநிலை மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  - ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலைக் கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
  - ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள் ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்த பாடத்தை நிறைவு செய்தல்.
  - ➢ இந்த ஆசிரியர் கைநூல் ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

- ❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு தட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

- ❖ பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் : 1.1.1, 2.1.1, 2.2.1, 3.1.1, 3.1.2, 3.1.3, 3.2.1, 3.2.2, 3.2.2.1, 4.1.1, 4.1.2, 4.1.3, 5.3.1. | செயற்பாட்டு இலக்கம் : 1.2.1, 2.2.2, 3.2.3, 3.2.4, 3.2.5, 3.3.1.1, 3.3.1.2, 4.1.4, 4.1.5, 4.2.1 4.2.3.1, 4.2.3.2, 4.2.3.3, 3.3.1, 4.3.2, 4.3.3, 5.1.1, 5.2.1. | செயற்பாட்டு இலக்கம் : 1.3.1, 2.3.1, 3.3.1.3, 3.3.2, 3.3.3, 4.1.6, 4.2.1, 4.3.1.4, 5.2.2, 5.4.1, 5.4.2. |

**தேர்ச்சி 1:0 : நயத்தல்**

- ☐ நயத்தல் தொடர்பான கற்பித்தலை மேற்கொள்ளும் போது மாணவர்களின் இரசனையைத் துண்டி அவர்களின் வெளிப்பாட்டை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்குக் கவர்ச்சியான முறையில் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

**தேர்ச்சி 2:0 : ஆக்கத்திறன்**

- ☐ ஆக்கத்திறனில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது அவர்களுக்குரிய வழிகாட்டல்கள் மத்திரம் ஆசிரியரினால் வழங்கப்பட வேண்டுமேயல்லாமல் எச் சந்தர்ப்பத்திலும் ஒரு நிகழ்வு ஆசிரியரினால் ஆக்கி வழங்கப்படக் கூடாது.

- ☐ அனைத்தும் மாணவர்களின் சொந்தக் கற்பனையாகவே இருக்க வேண்டும்.

**தேர்ச்சி 3:0 : செய்முறை**

- ☐ செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தும் போது பாத அசைவுகளில் குறித் தேர்ச்சி மட்டத்தை அடைந்த பின்பு தான் கை அசைவுகளுக்குரிய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- ☐ பாடவேளை போதாதவிடத்து மேலதிக வகுப்புக்களை நடாத்தி மாணவர்களைக் குறித்த மட்டத்தை அடையச் செய்ய வேண்டும்.

- ☐ முதலில் காற்செய்கையையும், பின்னர் கைச் செய்கையையும் தனித்தனியாக பயிற்சியளித்துத் தொகுத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 4:0 : அறிமுறை**

- ☐ அறிமுறைப் பாடப்பகுதிகள் அனைத்திற்கும் அன்றைய தினக் கற்றல் நடைபெற்று முடிந்த பின்பு மணவர்கள் குறிப்பெடுத்திருத்தல் அவசியமாகும்.

- ☐ குறிப்புக்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் அவற்றை வீட்டில் விரிவான வசன ஆக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- ☐ அதன் பின்பு தான் தேவையேற்படின் ஆசிரியர்கள் விரிவான விளக்கக் குறிப்பு வழங்கப்பட வேண்டும்.

- ☐ எக் காரணம் கொண்டும் ஆசிரியர் கைந்நுலில் வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்பு அப்படியே மாணவர்களுக்கு வழங்கப்படலாகாது.

- ☐ அத்துடன் ஆசிரியரின் தேடலும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- ☐ அடவுகள், உருப்படிகளுக்கான குறியீட்டு முறை விளக்கம் அளிக்கப்படும் போது, முதலில் ஒவ்வொரு தட்டிற்குமுரிய சொற்கட்டுக்கள் கீழ்காட்டியவாறு எழுதப் பயிற்றுவிக்கவும்.

  **ஊம் தா தெய் தெய்த அடவு**

## உள்ளுறையாக

**பக்கம்**


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தீ | iv |
| பாடத்திட்டக்குழு | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vii |
| **விரிவான பாடத்திட்டம்** | |
| • **அறிமுகம்** | x |
| • **தேசிய இலக்குகள்** | xii |
| • **அடிப்படைத் தேர்ச்சிகள்** | xiii |
| • **பாடத் தேர்ச்சிகள்** | xv |
| **பாடத்திட்டம்** | |
| **தவணை I** | 01 - 19 |
| **தவணை II** | 20- 45 |
| **தவணை III** | 46 - 63 |

# அறிமுகம்

ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் 6ஆம் தரத்தில் கல்வியைக் கற்கவரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாகப் புதிய பரத நாட்டியப் பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும் புதிய எண்ணக்கருக்களும் இக்கலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய கவின் கலைகள் ஒன்றிணைந்த பாடமாகக் கற்பிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டிலிருந்து இக்கலைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக 6ஆம் தரத்தில் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு புதிய சாகரத்தின் இரண்டாம் கலைத்திட்டமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தற்கால உலகில் மாற்றமடையாத ஒன்று மாற்றம் ஆகும். அதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எந்தவொரு கலைத்திட்ட மறுசீரமைப்பும் இரண்டு அம்சங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கின்றது.

(1) பாடச் சேர்க்கை – பாடக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பாடவிடயங்களை இற்றைப்படுத்தல்

(2) பாடவிடயங்களை மாணவரிடம் கொண்டு சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கற்றல் – கற்பித்தல் அணுகுமுறை

மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது, மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக் கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும், கற்றல் – கற்பித்தல் என்பவற்றை தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்றவகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தற்கால கல்வி முறையின் மூன்று துண்களாவன:–**

(1) அறிந்துள்ளவற்றைப் பேணிவருதல்.

(2) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயங்களைக் கற்றல்.

(3) ஏற்கனவே கற்கப்பட்ட விடயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

இச்செயற்பாடு ஏற்கனவே அறிந்துள்ளவற்றைத் தொடர்ந்தும் மாற்றியமைத்து புதுமைப்படுத்தும் புதிய சமூகமொன்றை உருவாக்கும். இதுவரைண்டறியப்படாதவை தொடர்பாக, இளம் சந்ததியினரை வழிப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தேடலில் ஈடுபட்டு, ஏற்கனவே அறிந்துள்ளவற்றை மாற்றியமைத்தும், இதுவரை கண்டறியப்படாதவற்றை தேடியறிவதற்கும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது இப்புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும்.

வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான திறன்கள், ஆற்றல்களை அதாவது ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன் (Thinking skill ), சமூகத் திறன் (Social skill ), சுயதிறன் (Personal skill ) ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய காலமாகப் பாடசாலைக் காலத்தில் வழங்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான கலைத்திட்டம் இதுவாகும்.

வந்தபின் செயற்படும் அணுகுமுறைக்குப் பதிலாக, வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொள்வது இன்றைய எதிர்கால சந்ததியினருக்கு அவசியமானதொன்றாகும். எனவே, நாளைய உலகை வெற்றி பெறுவதற்காகத் தேடலை முனைப்பாகக் கொண்ட வகையில், இப்புதிய கலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்கால சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுடைய சமூகத்தை உருவாக்குவது இப்புதிய பாடத்திட்டத்தின் தாரக மந்திரமாகும்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV.** **வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V.** **சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI.** **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII.** **“கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## பாடத் தேர்ச்சிகள்

- பரத நாட்டியத்துடன் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.
- படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
- தேசிய, பன்னாட்டுக் கலைகளை அறிந்து மதிப்பளிப்பார்.
- அழகியல் நயப்புடையவராவார்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கை வளர்ப்பார்.
- பண்பாட்டின்பால் பற்றுறுதியையும், மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்தி செய்வார்.
- தன்னாற்றலை இனங்கண்டு, கலை நிகழ்வுகளை ஆற்றுகைப்படுத்தும் திறனை விருத்தி செய்வார்.
- சிறந்த தொடர்பாடற் திறனை விருத்தி செய்வார்.
- தாமாக முன்வந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் திறனைப் பெறுவார்.
- இயற்கையை நயந்து வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குவார்.
- குழுவாக இயங்கும் பண்பை விருத்தி செய்வார்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.
- சமூக அங்கீகாரம், புகழ் என்பவற்றைப் பெற்றுக் கொள்வார்.
- கலை நுணுக்கங்களை அறிந்து அதனை விபரிக்கும், விமர்சிக்கும் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்வார்.
- கலைத் தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புகளுக்கு முயற்சிப்பார்.

# முதலாம் தவணை

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : இயற்கைச் சூழலை இரசித்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.1.1** : மரக்கிளைகள், செடி, கொடிகள் ஆகியவற்றின் அசைவுகளை அவதானித்து நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 03

**தர உள்ளீடுகள்** : மரக்கிளைகள், செடி,கொடி ஆகிய இயற்கைக் காட்சிகள் அடங்கிய இறுவட்டுக்கள்.

**கற்றற் பேறுகள்** :

- இயற்கைச் சூழலின் இரசனையை வெளிப்படுத்துவார்.
- காலநிலை மாற்றங்களுக்கேற்ப மரக்கிளைகள், செடி, கொடி அசைவுகளின் மாற்றங்களை இரசிக்கவும் இரசித்தவற்றை அபிநயிக்கவும் அறிந்திருப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ இயற்கைச் சூழல் சம்பந்தமான ஒளிப்பதிவு செய்யப்பட்ட இறுவட்டைப் பார்வையிடச் செய்தல்
- ♦ பார்வையிடப்பட்ட மரம், செடி, கொடிகளின் அசைவுகளை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்
  - மரக்கிளைகளின் அசைவு.
  - செடி, கொடிகளின் அசைவு.
  - கொடிகள் படரும் விதம்.
- ♦ இயற்கைச் சூழலுக்கு மாணவரை அழைத்துச் செல்லுதல்.
- ♦ இயற்கைச் சூழலில் உள்ள பின்வரும் விடயங்களை அவதானிக்கச் செய்தல்.
  - காற்று வீசும் போது மரக்கிளைகள் அசைதல்.
  - கொடிகளின் அசைவுகள்.
  - கொடிகள் மரங்களிலும், சுவர்களிலும் படருதல்.
- ♦ அவதானித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு அசைவுகளை மேற்கொள்ளுதல்.
- ♦ குழுவாக அபிநயிக்க வழிகாட்டல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- மரக்கிளைகள், செடி, கொடிகளின் அசைவுகளை நுட்பமாக அவதானிக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- மரக்கிளைகள், செடி, கொடிகளின் அசைவுகளை நயந்து வெளிப்படுத்துவார்.

- கிளைகள், செடி, கொடிகள் போல் அசைந்து காட்டுவார்.

- தமது சூழலிலும், இறுவட்டிலும் பார்வையிட்ட விடயங்களை வேறுபடுத்தி இனங்காண்பார்.

- குழுவாக அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 2.0 :** இயற்கைச் சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்2.1 :** இயற்கைச் சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றைப் பாவனை செய்து காட்டுவார்.

**செயற்பாடு 2.1.1 :** இயற்கையில் காணப்படும் மரங்கள், செடி கொடிகளின் அசைவுகளையும், காற்று, மழை, அருவி என்பவற்றின் அசைவுகளையும் பாவனை செய்வோம்.

**பாடவேளைகள் :** 02

**தர உள்ளீடுகள் :** மரம், செடி, கொடி, காற்று, மழை, அருவி போன்றவற்றின் காட்சிகள் அடங்கிய காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள் :**

- இயற்கை நிகழ்வுகளைப் பாவனை செய்து காட்டுவார்.
- இயற்கை நிகழ்வின் போது மழை பெய்தலைத் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வுகளைச் சித்தரிப்பதற்குரிய ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

- ♦ ஏற்கனவே வகுப்பில் கற்று இரசித்து, அபிநயித்துக் கூறிய இயற்கைச் சூழல் சம்பந்தமான விடயங்களைப் பற்றி நினைவு கூருதல்.
- ♦ மரம், செடி, கொடி, காற்று, மழை, அருவி போன்றன அடங்கிய காணொளி இறுவட்டினைப் பார்வையிடச் செய்தல்.
- ♦ பார்வையிட்ட விடயங்ளைக் கொண்டு கீழ்வரும் விடயங்களை அபிநயிக்க வழிப்படுத்தல்.
  - மரஞ்செடி, கொடி அசைதல்.
  - கொடி மரத்தில் படருதல்.
  - கடலலை.
  - அருவி பாய்தல்.
  - மழைபெய்தல். இதனைத் தொடர்ந்து நீரில் விளையாடுதல்.
  - கப்பல் விடுதல்.
- ♦ மாணவர்களைத் தொகைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்து இயற்கை அசைவுகளைப் பாவனை செய்யும்படி கூறுதல்.
- ♦ மாணவர்கள் குழுக்களாக அபிநயிக்கும் போது ஆசிரியர் அவதானித்து நெறிப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- ♦ இயற்கை நிகழ்வுகளைப் பாவனை செய்வார்.
- ♦ மழை பெய்யும் போது தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளைப் பாவனை செய்வார்.
- ♦ ஏனைய குழுவினரின் பாவனையை விமர்சிப்பார்.
- ♦ மழை பெய்யும் போது மரக்கிளைகள், செடி, கொடிகளில் ஏற்படும். மாற்றங்களை அபிநயிப்பார்.

**தேர்ச்சி 2.0 :** இயற்கைச் சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும் கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** அபிநயப் பாடலுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.

**செயற்பாடு 2.2.1 :** ''சின்னச் சின்ன சிறுமியர் நாமே'' என்ற பாடலைப் பாடி அபிநயம் அமைத்து அபிநயித்துக் காட்டுவோம்.

**பாட வேளைகள்** : 05

**தர உள்ளீடுகள்** : பாடல் எழுதப்பட்ட அட்டை தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**கற்றற் பேறுகள்** :

- சின்னச் சின்ன சிறுமியர் நாமே எனும் பாடலை இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.
- பாடலுக்கு அபிநயித்துக் காட்டுவார்.
- பாடலின் பொருளிற்கேற்ப முத்திரைகளைப் பிரயோகிப்பார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

- ♦ சின்னச் சின்ன சிறுமியர் நாமே என்ற பாடல் எழுதிய அட்டைகளைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ மாணவர் ஏற்கனவே கற்ற அபிநயப் பாடல்கள் தொடர்பாக வினாக்களை வினவிக் கலந்துரையாடுதல்.
- ♦ ஆசிரியர் பாடலைப் பாட, மாணவர் செவிமடுத்தல்.
- ♦ ஆசிரியர் பாடலைப் பாட, மாணவர் சேர்ந்து பாடுதல்.
- ♦ ஆசிரியரும் மாணவரும் இணைந்து இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுதல்.
- ♦ மாணவரைக் குழுவாகவும், தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ♦ மாணவர்களின் தொகைக்கேற்பக் குழுக்களாகப் பிரித்துப் பாடலுக்கு அபிநயம் அமைக்க வழிப்படுத்தல்.
- ♦ மாணவர்களைக் குழுவாக இயங்கவிட்டு ஆசிரியர் அவதானித்தல்.
- ♦ பாடலின் பொருளுக்கேற்ப முத்திரைகளை அபிநயிக்க நெறிப்படுத்துதல்.
- ♦ ஒரு குழு அபிநயித்ததை மற்றைய குழு அவதானித்துக் கருத்துக் கூறுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாடலின் இராக, தாளத்தை அறிந்து பாடுவார்.
- பாடலை முழுமையாகத் தகுந்த முத்திரைப் பிரயோகங்களுடன் அபிநயிப்பார்.
- பாடலின் இராக, தாளத்தைக் கூறுவார்.
- பிரயோகித்த முத்திரைகளைக் கூறுவார்.
- குழுவினரின் ஆடல் பற்றிய விமர்சனத்தை வைப்பார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்ப தசைநார்ப் பயிற்சிகளையும், அடவுகளையும். அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்3.1** : பரத நாட்டியத்திற்குரிய அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்வார்.

**செயற்பாடு 3.1.1** : தசைநார்ப் பயிற்சிகளைச் செய்து காட்டுவோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : தட்டுக்கழி, தட்டுப்பலகை, இறுவட்டுக்கள், பாதநிலைகளின் படங்கள்.

**கற்றற் பேறுகள்** :

- அடவுகள் செய்வதற்குரிய தசைநார்ப் பயிற்சிகளைச் செய்து காட்டுவார்.
- முத்திரைகளை அபிநயிப்பதற்கான தசைநார்ப் பயிற்சிகளைச் செய்து காட்டுவார்.
- அடிப்படைப் பயிற்சிகளினூடாக உடலினை இலகுவாக இயங்கச் செய்ய முடியும் என்பதை ஏற்றுக் கொள்வார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

♦ தசைநாாப் பயிற்சிக்குரிய எளிய பாத நிலைகளின் படங்களையும், கைகளின் நிலைகள் அடங்கிய படங்களையும் காட்சிப்படுத்துதல்.

♦ மாணவர்கள் பாடசாலை ஆரம்பிக்கும் முன் உடற்பயிற்சி செய்வதற்கான காரணம் பற்றிக் கலந்துரையாடி, வெளிப்புறச் சூழலுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லுதல்.

♦ உடற்பயிற்சியின் ஆரம்பத்திற் செய்யப்படும் எளிய பயிற்சிகளாகிய ஓடுதல், துள்ளுதல் ஆகிய பயிற்சிகளைச் செய்து உடலைத் தளர் நிலைக்குக் கொண்டு வருதல்.

♦ இப்பொழுது அவர்களின் உடலில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

♦ மீண்டும் வகுப்பறைக்கு அழைத்து வருதல்.

♦ முத்திரைக்குரிய பயிற்சிகளை ஆசிரியர் செய்தல்.

♦ மாணவர்கள் அவதானித்துச் செய்தல்
  - சம பாத நிலையில் நின்று மார்பின் முன் இரு கைகளையும் வைத்து விரல்களை விரித்தும் மடக்கியும் செய்தல்.
  - சமபாதத்தில் நின்று மார்பின் முன் அஞ்சலி ஹஸ்தம் பிடித்துப் பின்னர் விரித்தல்.

♦ அடவுக்குரிய தசைநாரப் பயிற்சி
  - சம பாதத்தில் நின்று கைகளிரண்டையும் மேலே உயர்த்திப் பின் முழங்கால் மடியாமற் குனிந்து கைகளால் நிலத்தைத் தொடுதல்.

- சமபாதத்தில் நின்று இரு கைகளையும் இடுப்பில் வைத்து இடுப்பை வட்டமாகச் சுற்றுதல்.

♦ முழுமண்டியில் இருந்து இரு கைவிரல்களையும் கோர்த்துப் பிடித்தபடி கால் நுனி விரல்களினால் முன், பின், இடம், வலமாகத் துள்ளுதல்.

♦ தரையில் அமர்ந்து இரு உள்ளங்கால்களையும் ஒன்றோடு ஒன்று சேர்த்து இரு கைகளாலும் பிடித்துக் கொள்ளல். பின்னர் தொடைகள் நிலத்திற் படுமாறு அசைத்தல். (வண்ணத்துப்பூச்சி சிறகடிப்பது போல்)

♦ மேற்கண்ட பயிற்சிகளை ஆசிரியர் செய்து காட்ட மாணவர் அவதானித்துப் பயிற்சியிலீடுபடுவார்.

♦ மாணவர் பயிற்சியிலீடுபடும் போது ஆசிரியர் அவதானித்து நெறிப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- முத்திரைகள் செய்வதற்குரிய தசைநார்ப் பயிற்சிகளைச் செய்து காட்டுவார்.
- அடவுகள் செய்வதற்குரிய தசைநார்ப் பயிற்சிகளைச் செய்து காட்டுவார்.
- உடலை இலகுவாக இயங்க வைக்கச் செய்ய வேண்டியது என்ன என்பதைக் கூறுவார்.
- பாடசாலை ஆரம்பிக்குமுன் உடற்பயிற்சி செய்வதன் காரணத்தைக் கூறுவார்.
- உடற் பயிற்சியின் ஆரம்பத்தில் செய்யப்படும் எளிய பயிற்சிகளை இனங் கண்டு கூறுவார்.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்ப தசைநார்ப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பரத நாட்டியத்திற்குரிய அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்வார்.

**செயற்பாடு 3.1.2 :** நமஸ்காரத்தினைப் பக்தியுடனும். அங்கசுத்தத்துடனும் செய்வதற்குக் கற்றுக் கொள்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : தட்டுக்கழி, தட்டுப்பலகை, எளியபாத நிலைகளின் படங்கள், நமஸ்காரத்திற்குரிய முத்திரைகள் வரையப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- நமஸ்காரத்திற் பயன்படுத்தப்படும் முத்திரைகளைக் குறிப்பிடுவார்.
- நமஸ்காரத்தில் இடம்பெறும் வணக்கத்திற்குரிய தெய்வங்களைப் பற்றிக் கூறுவார்.
- நாட்டியத்தில் நமஸ்காரம் செய்யும் முறையை விவரிப்பார்.
- நமஸ்காரம் என்பது நாட்டியத்தின் ஆரம்பத்திலும், இறுதியிலும் செய்யப்படும் வணக்கம் என்பதனை அறிந்து பிரயோகிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- பல்வேறுபட்ட வணக்க முறைகளைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
    - அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள்
    - பெரியோரை விழுந்து வணங்குதல்
- குரு, பூமாதேவி, அஷ்டதிக்குப் பாலகர்கள் ஆகியோருக்காக நமஸ்காரம் செய்யப்படுதல்.
- இதேபோன்று நமஸ்காரம் நடனத்தின் ஆரம்பத்திலும். இறுதியிலும் இடம்பெறும் என்பதனைக் கூறுதல்.
- நமஸ்காரத்திற்குப் பயன்படுத்தப்படும் முத்திரைகள் ஒட்டப்பட்ட அட்டை, படங்களைக் காட்சிப்படுத்திப் பயிற்சியை மேற்கொள்ளல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நமஸ்காரம் செய்வதற்குரிய நோக்கத்தைக் கூறுவார்.
- நமஸ்காரம் செய்யும் போது வணங்கப்படும் கடவுளரைக் குறிப்பிடுவார்.
- நமஸ்காரம் செய்யப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
- பல்வேறு பட்ட நமஸ்காரங்களைக் கூறுவார்.
- பெரியோரை எவ்வாறு வணங்க வேண்டும் என்பதைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பரத நாட்டியத்திற்குரிய அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்வார்.

**செயற்பாடு 3.1.3** : தியான ஸ்லோகத்தினை அபிநயிக்கக் கற்றுக் கொள்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : தட்டுக்கழி, தட்டுப்பலகை, தியான ஸ்லோகம் எழுதப்பட்ட அட்டை, தியான ஸ்லோக முத்திரைகளின் படங்கள் அடங்கிய அட்டை.

**கற்றல் பேறுகள்** :

- தியான ஸ்லோகத்தினை அபிநயித்துக் காட்டுவார்.
- தியான ஸ்லோகம் சிவன் மீது பாடப்படுவது என்பதைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- ♦ தியான ஸ்லோகத்தினை முழுமையாக அபிநயித்துக் காட்டுதல்.
- ♦ பகுதி பகுதியாக ஆசிரியர் அபிநயிக்க மாணவர் பின்பற்றுவார்.
- ♦ குழுக்களாக மாணவரைப் பிரித்துத் தியான ஸ்லோகத்தினை அபிநயிக்கச் செய்தல்.
- ♦ மாணவர் அபிநயிக்கும் போது அங்க சுத்தத்துடனும், பாவத்துடனும் முத்திரைகளைப் பிரயோகிப்பதை அவதானித்து வழி நடத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தியான ஸ்லோகத்தினை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறுவார்.
- அங்க சுத்தத்துடனும், பாவத்துடனும் அபிநயிப்பார்.
- தியான ஸ்லோகம் பாடப்படும் இறைவனின் பெயரைக் குறிப்பிடுவார்.
- பிரயோகிக்கப்படும் ஒற்றைக்கை முத்திரைகளைக் குறிப்பிடுவார்.
- பிரயோகிக்கப்படும் இரட்டைக் கை முத்திரைகளைக் குறிப்பிடுவார்.
- பிரயோகிக்கப்படும் அபூர்வ ஹஸ்தங்களைக் குறிப்பிடுவார்.

.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : அடிப்படை அடவுகள், கோலப் பயிற்சிகள் முத்திரைப் பிரயோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.1** : ஒற்றைக் கை முத்திரைகளை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறி அபிநயித்துக் காட்டுவோம்.

**பாட வேளைகள்** : 04

**தர உள்ளீடுகள்** : ஒற்றைக்கை முத்திரைகள் அடங்கிய படஅட்டை, காணொளி இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் கைக்குறியீடே முத்திரை என வரைவிலக்கணப்படுத்துவார்.
- ஒரு கையினாற் செய்யப்படுவது ஒற்றைக் கை முத்திரை எனக் கூறுவார்.
- ஒற்றைக் கை முத்திரைகளைத் தெளிவுபட உச்சரித்துக் காட்டுவார்.
- ஒற்றைக் கை முத்திரையின் பொருள் கூறுவார்.
- ஒற்றைக் கை முத்திரைகளை அபிநயித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- ♦ சாதாரண வாழ்க்கையில் பொருள்களைக் குறிக்கப் பயன்படும் அபிநயம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- ♦ ஒரு பொருளைக் குறிக்கும் கைக்குறியீடு முத்திரை எனக் கூறுதல்.
- ♦ தியான ஸ்லோகத்தில் இடம்பெற்ற ஒற்றைக் கை முத்திரைகள் பற்றிக் குறிப்பிடல்.
- ♦ ஒற்றைக் கை முத்திரைகள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ காணொளி இறுவட்டிலுள்ள ஒற்றைக் கை முத்திரைகளைப் பார்வையிடச் செய்தல்.
- ♦ பார்வையிட்ட முத்திரைகளையும், தியான ஸ்லோகத்தில் இடம்பெற்ற முத்திரைகளையும் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ அடவு, அபிநயம் இரண்டிற்கும் முத்திரைகள் முக்கியமானவை.
- ♦ ஒரு கையினால் செய்வது ஒற்றைக்கை முத்திரை ஆகும்.

- இதனை அஸம்யுத ஹஸ்தம் என அழைப்பர்.

- இதில் 28 உண்டு.

- ♦ ஒற்றைக் கை முத்திரைகளை சமஸ்கிருத உச்சரிப்பில் கூறுதல்.
- ♦ ஒற்றைக் கை முத்திரைகளின் கருத்தைக் கூறுதல்.
- ♦ ஒற்றைக் கை முத்திரைகளினை ஆசிரியர் அபிநயித்துக் காட்ட மாணவர்கள் அவதானித்துப் பின்பற்றுதல்.
- ♦ வகுப்பில் உள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ♦ ஒரு குழு முத்திரை அபிநயிக்கும் போது மற்றைய குழுவைப் பார்வையிடச் செய்தல்.
- ♦ ஒவ்வொரு குழுவும் விமர்சனங்களை முன்வைக்க இடமளித்தல்.
- ♦ மாணவர்களின் குறை, நிறைகளைச் சுட்டிக்காட்டித் தேவையெனின் மேலதிக பயிற்சியை வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- ஒற்றைக் கை முத்திரைகளைச் சரியான உச்சரிப்புடன் முழுமையாக அபிநயித்துக் காட்டுவார்.
- அவற்றின் கருத்துக்களைக் கூறுவார்.
- ஒற்றைக் கை முத்திரை என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
- அதன் எண்ணிக்கையைக் கூறுவார்.
- அதன் மறு பெயரைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : அடிப்படை அடவுகள், கோலப் பயிற்சிகள், முத்திரைப் பிரயோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.2** : 1ஆவது 2ஆவது தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயிப்போம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : பாத நிலைகளுக்கான வரைபடங்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை

**கற்றற் பேறுகள்** :

- 1ஆவது, 2ஆவது தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயிப்பார்.
- அவற்றைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ 1ஆவது, 2ஆவது தட்டடவுகள் ஆதி தாளத்தில் இடம்பெறும் எனக் கூறுதல்.
- ♦ பாதநிலை, அங்கநிலை பற்றி மாணவருடன் கலந்துரையாடி வகுப்பை ஆரம்பித்தல்.
- ♦ பாத நிலைகளின் வரைபடங்களைக் காட்சிப்படுத்தல்.
- ♦ அரைமண்டியில் இருத்தல், கால்களை மடித்துத் தட்டுதல் போன்ற ஆரம்பப் பயிற்சிகளை ஆசிரியர் செய்து காட்டுவதுடன் அவற்றை மாணவர் அவதானித்து அபிநயித்தல்.
- ♦ 1ஆவது தட்டடவினை ஆசிரியர் அபிநயித்துக் காட்டுதலும் மாணவர் அவதானித்துச் செய்தலும்.
- ♦ முதலில் விளம்ப, மத்திம காலங்களிலும் பின்னர் துரித காலத்திலும் பயிற்சி அளித்தல்.
- ♦ அடவின் சொற்கட்டைத் திரிகாலங்களிலும் தாளத்துடன் கொலுப்பித்துக் காட்டுதல்.
- ♦ மாணவர் அவதானித்துக் கொலுப்பித்தல்.
- ♦ 1ஆவது தட்டடவின் கற்பித்தற் செயலொழுங்கின் படி 2ஆவது தட்டடவினையும் செய்தல்.
- ♦ மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒரு குழு அபிநயிக்கும் போது மற்றைய குழு தாளம் போடுவதற்கு வழிப்படுத்தல்.
- ♦ ஒரு குழுவை அவதானித்து ஏனைய குழுக்கள் கருத்துக் கூறுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தட்டடவு என்ற சொல்லின் பொருளைக் கூறுவார்.
- 1ஆவது 2ஆவது தட்டடவுகளின் சொற்கட்டைக் கூறுவார்.
- 1ஆவது 2ஆவது தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயித்துக் காட்டுவார்.
- 1ஆவது 2ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.
- அடவின் பாதநிலை, அங்கநிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும் அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : அடிப்படை அடவுகள், கோலப் பயிற்சிகள், முத்திரைப் பிரயோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.2.1** : 3ஆவது 4ஆவது தட்டடவுகளை திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : பாத நிலைகளுக்கான வரைபடங்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை

**கற்றற் பேறுகள்** :

- 3ஆவது, 4ஆவது தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயிப்பார்.
- அவற்றைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- ♦ 3ஆவது தட்டடவு ரூபகதாளத்திலும் 4வது தட்டடவு ஆதிதாளத்திலும் இடம்பெறும்.
- ♦ பாதநிலை, அங்கநிலை பற்றி மாணவருடன் கலந்துரையாடல்.
- ♦ பாத நிலைகளின் வரைபடங்களைக் காட்சிப்படுத்தல்.
- ♦ அரைமண்டியில் இருத்தல், கால்களை மடித்துத் தட்டுதல் போன்ற ஆரம்பப் பயிற்சிகளை ஆசிரியர் செய்து காட்டுவதுடன் மாணவர் அவதானித்து அபிநயித்தல்.
- ♦ முதலிரண்டு அடவுகளுக்கும் மேற்கொண்ட கற்பித்தல் முறையைப் பின்பற்றவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- தட்டடவு என்ற சொல்லின் பொருளைக் கூறுவார்.
- 3ஆவது, 4ஆவது தட்டடவுகளின் சொற்கட்டைக் கூறுவார்.
- 3ஆவது. 4ஆவது தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயித்துக் காட்டுவார்.
- 3ஆவது, 4ஆவது தட்டவுகளினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.
- அடவு ஆடும் போது பின்பற்ற வேண்டிய பாதநிலை பற்றிக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் , எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.1** : பரத நாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகளை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தரஉள்ளீடுகள்** : பரதம் கற்பதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய அட்டை

**கற்றற் பேறுகள்** :

- பரத நாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் பற்றிக் குறிப்பிடுவார்.
  - பக்தி உணர்வு
  - அழகுணர்ச்சி, ரசனை
  - ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை
  - உடல் உறுதி, சமநிலை
  - உதவி செய்யும் மனப்பான்மை, பாராட்டுக்கள்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**:

- ♦ பரத நாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பில் மாணவர்கள் அறிந்த விடயங்களைக் கலந்துரையாடுதல்.
- ♦ அறிந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.
  - பரத நாட்டியம் கற்க ஆரம்பிக்கும் போது செய்யப்படும் நமஸ்காரம் தொடர்ந்து செய்யப்படும் தியான ஸ்லோகம் என்பவற்றினூடாகப் பக்தி உணர்வு உண்டாகும்.
  - குழுவாக நடனமாடும் போது குழு ஒற்றுமை ஏற்படும்.
  - போட்டிகளிற் பங்குபற்றும் போது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உண்டாகும்.
  - நடனப் பயிற்சி செய்யும் போது உடலுறுதியும், சமநிலையும் ஏற்படும்.
  - சமூக அங்கீகாரம், புகழ் என்பன கிடைத்தல்.
  - கற்பனையாற்றலைப் படைப்புக்களினூடாக வெளிக்கொண்டு வருதல்.
  - நடனம் கற்பதனால் வேறு கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து இரசிப்பதற்குரிய ஆர்வம் ஏற்படுதல்.
  - மற்றவர்களின் கலை நிகழ்வுகளைப் பாராட்டுதல்.
  - நடனத்திற்கு ஒப்பனை செய்யும் போதும் ஒருவருக்கொருவர் உதவி செய்தல்.
- கலந்துரையாடலை மேற்கொள்ளும் போது குறிப்புக்களை எழுதும் படி பணித்தல்.
- ஒவ்வொரு மாணவர்களாலும் எழுதப்பட்ட குறிப்புக்களைப் படிக்கச்செய்து தவறவிட்ட விடயங்களை மீளவலியுறுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- பரத நாட்டியம் கற்பதனால் ஏற்படும் உடலியல் ரீதியானநன்மைகளைக் கூறுவார்.
- பரத நாட்டியம் கற்பதாலேற்படும் சமூக ரீதியான நன்மைகளைக் கூறுவார்.
- பரதம் கற்பதாலேற்படும் ஒழுக்க நெறி சார்ந்த நன்மைகளைக் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.2** : ''குரு வணக்கம்'' என்ற ஸ்லோகத்தினையும் கருத்தினையும் கற்போம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : குருவணக்கம் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்** :

- குருவிற்கு வணக்கம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை ஏற்று நடப்பார்.
- குரு வணக்க ஸ்லோகத்தைப் பக்தி உணர்வுடன் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோருக்கு வணக்கம் செலுத்துவதைப்பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ கடவுளை வணங்கும் போது தோத்திரம் பாடுதல்.
- ♦ பெற்றோரை வணங்கும் போது விழுந்து பணிதல்.
- ♦ மாதா, பிதாவிற்கு அடுத்தபடியாகத் தெய்வத்திற்கு முன்னர் குரு சிறப்பிடம் பெறுதல்.
- ♦ குருவை வணங்கி வித்தைகளைக் கற்றல் சிறந்த பலாபலனைத் தரும்.
- ♦ நடராஜரை வணங்கித் தியான ஸ்லோகம் கூறுவது போன்று வித்தை கற்பிக்கும் குருவை வணங்கிக் குரு வணக்க ஸ்லோகம் கூறப்படும்.

''குருப்ரம்மா குருவிஸ்ணு குருதேவோ மகேஸ்வரஹ
குரு சாட்சாத் பரப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ''

என்ற ஸ்லோகத்தை வணங்கிய நிலையில் ஆசிரியர் கூறுதல். மாணவர் அதனைப் பின்பற்றுதல்.

- ♦ குரு வணக்கம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ மாணவரைப் குறிப்பு எடுக்க வலியுறுத்தல்.
- ♦ ஸ்லோகத்தின் கருத்தினைக் கூறுதல்.
- ♦ மாணவர் கருத்தினைக் கூறிக் குறிப்பு எடுத்தல்.

''குருவே பிரம்மா குருவே விஸ்ணு குருவே மகேஸ்வரன்
பரம்பொருளாகிய அந்தக் குருவை நான் வணங்குகின்றேன்''.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- குருவணக்க ஸ்லோகத்தினைக் கூறுவார்.
- கருத்தினைக் கூறுவார்.
- நாம் யார், யாரை வணங்குகின்றோம் என்பதைப் பட்டிற்படுத்துவார்.
- குருவை ஏன் வணங்க வேண்டும் என்பதைக் கூறுவார்.
- எந்த ஒழுங்கு வரிசையில் குருவை வணங்க வேண்டும் என்பதைக் கூறுவார்.

**குறிப்பு** : ஒவ்வொரு நாள் வகுப்பும் ஆரம்பிக்கும் போது இச் சுலோகம் மாணவர்களாற் சொல்லப்படுவது அவசியமாகும்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.3** : நமஸ்காரம் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : நமஸ்காரத்தில் இடம்பெறும் முத்திரைகள், பாத நிலைகள் ஆகியன ஒட்டப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- நமஸ்காரம் என்பது பற்றி விளக்கமளிப்பார்.
- நடனத்தில் நமஸ்காரத்தின் முக்கியத்துவம், செய்யப்படும் சந்தர்ப்பம் என்பவற்றைக் கூறுவார்.
- நமஸ்காரத்தில் பயன்படுத்தப்படும் முத்திரைகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ நமஸ்காரம் என்பது வணக்கம் செலுத்துதல் என்பதை விளக்குதல்.
- ♦ நமஸ்காரம் செய்யப்படுவதன் முக்கியத்துவம், நமஸ்காரம் செய்யப்படும் போது வணங்கப்படும் தெய்வங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ நமஸ்காரம் என்னும் விடயத்தினைப் பற்றிச் செயன்முறைப் பாடத்திற் கற்றவற்றை நினைவுபடுத்தி நடனத்தில் நமஸ்காரம் குரு, தெய்வம், அஸ்டதிக்குப் பாலகர்கள், பூமாதேவி ஆகியோருக்குச் செய்யப்படுவதையும் நடனம் செய்ய ஆரம்பிக்க முன்பும் முடிவடைந்த பின்பும் அது செய்யப்படுகின்றது என்பதையும் கூறுதல்.
- ♦ நமஸ்காரம் செய்யும் போது பயன்படுத்தப்படும் நான்கு முத்திரைகளாவன: கடகாமுகம், சிகரம், சதுரம், அஞ்சலி. அஞ்சலி இரட்டைக் கை முத்திரையாகும். ஏனையவை ஒற்றைக்கை முத்திரைகளாகும்.
- ♦ நடனத்தின் தெய்வீகத்தன்மை காரணமாக நமஸ்காரம் முக்கியத்துவம் பெறுகின்றது.
- ♦ பக்தி பூர்வமாகப் பயபக்தியுடன் நடனக் கலையைக் கற்க வேண்டியது அவசியம்.
- ♦ நமஸ்காரம் செய்யும் போது அதில் உளப்பூர்வமாக ஈடுபடுவதன் அவசியம்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- நமஸ்காரத்தின் முக்கியத்துவத்தினை விளக்குவார்.
- நமஸ்காரம் செய்யப்படும் சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுவார்.
- நமஸ்காரம் செய்யும் போது இடம்பெறும் ஒற்றைக் கை, இரட்டைக் கை முத்திரைகளைக் குறிப்பிடுவார்.
- நமஸ்காரம் யார், யாருக்காகச் செய்யப்படுகின்றது என்பதைக் குறிப்பிடுவார்.
- நமஸ்காரம் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசார, பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 5..3** : நடனத்தின் உலகியல் வரலாற்றுப் பின்னணியையும் ஆராய்ந்து அறிவார்.

**செயற்பாடு 5.3.1** : உலகியல் வரலாற்றுடன் தொடர்புபடுத்தி நடனத்தின் தோற்றம் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : ஆதிகால மனிதனின் பரிணாம வளர்ச்சியைக் காட்டும் படங்கள்.

**கற்றற் பேறுகள்** :

- ஆதிகால மனிதன் தனது கருத்துக்களைப் புலப்படுத்திய விதத்தினை அறிந்து வெளிப்படுத்துவார்.
- இரஸம் எவ்வாறு பிறந்தது எனக் கூறுவார்.
- நடனம் மொழியை விடத் தொன்மையானது என்பதை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- ♦ மாணவர்களுடன், ஆதிகால மனிதனின் நடை, உடை, பாவனை, கருத்துக்களைப் புலப்படுத்திய விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ♦ இயற்கையைப் பார்த்து ஆதி மனிதனின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றம்.
- ♦ மனிதன் சந்தோஷ மிகுதியாற் குதித்தது நடனமாகியது.
- ♦ கோபம் வந்தாற் சத்தமிட்டும், கூச்சலிட்டும், விலங்குகள், பறவைகள் போற் தானும் குரலெழுப்பியது இராகமாகியது.
- ♦ கைகளை ஒத்திசைவுடன் தட்டியது தாளமாகியது.
- ♦ பாவ, ராக, தாளம் ஆகியன மொழி தோன்றும் முன்னரே தோன்றியது.
- ♦ இயற்கையைப் பாவனை செய்ததன் மூலம் ஆதி மனிதன் நடனத்தைப் புலப்படுத்தினான்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- ஆதிகால மனிதன் தனது கருத்துக்களைப் புலப்படுத்திய விதத்தினை விவரிப்பார்.
- உணர்ச்சி மிகுதியால் அவனது நடத்தையில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பிடுவார்.
- மொழியை விட ஆடல் தொன்மையானது எனக் கூறுவார்.
- இராகம் எவ்வாறு தோன்றியது என்பதைக் கூறுவார்.
- தாளம் எவ்வாறு தோன்றியது என்பதைக் கூறுவார்.

# இரண்டாம் தவணை

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : கிராமிய நடனங்களை இரசித்து நயப்பார்.

**செயற்பாடு 1.2.1** : காவடி, கும்மி ஆகிய நடனங்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : கும்மி, காவடி நடனங்கள் அடங்கிய காணொளி, இறுவட்டு

**கற்றற் பேறுகள்** :

- காவடி, கும்மி நடனத்திற்குரிய வாத்தியங்களைக் குறிப்பிடுவார்.
- காவடி, கும்மி நடனத்திற்கு அணியப்படும் ஆடை, அணிகலன்களின் பொருத்தப்பாட்டினை வெளிப்படுத்துவார்.
- காவடி நடனப் பாடல் முருகக் கடவுள் மீது பாடப்படுவதை ஏற்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

♦ ஏற்கனவே பார்வையிட்ட கும்மி, காவடி போன்ற கிராமிய நடனங்களைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

♦ காவடி, கும்மி நடனங்கள் அடங்கிய இறுவட்டினை வகுப்பில் காண்பித்துப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.

- காவடி நடனத்தில் உடுக்கு, தவில், நாதஸ்வரம், தாளம் போன்ற பக்கவாத்தியங்கள் இசைக்கப்படும்.
- காவடி நடன இசை இயல்பாக ஆட்டத்தை ஏற்படுத்தும் தன்மை.
- இந்த நடனங்களுக்கான பாடல்கள் எளிய முறையில் எல்லா மக்களாலும் பாடவும், கேட்கவும் கூடிய வகையில் அமைந்துள்ளமை.
- கும்மி நடனத்திற்குப் பாவாடை, சட்டை, சேலை அணியப்படும்.
- காவடி நடனத்தில் வேட்டியைத் தார்பாய்ச்சியாகக் கட்டுதல் வழக்கமாகும்.
- கும்மி நடனத்தின் ஆபரணங்கள், காப்பு, மாலை, தோடு, சிமிக்கு, கொலுசு, போன்றனவாகும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- காவடி நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் வாத்தியங்களைப் பட்டியற்படுத்துவார்.

- பார்வையிட்ட நடனங்களிற் பயன்படுத்தப்பட்ட பாடலைப் பாடிக் காட்டுவார்.

- இந் நடனங்களிற்குப் பயன்படுத்தப்படும் ஆடை அணிகலன்களின் பொருத்தப்பாட்டினைக் கூறுவார்.

- கும்மி நடனத்திற்குப் பாவிக்கப்படும் வாத்தியங்களைப் பட்டியற் படுத்துவார்.

- காவடி நடனத்திற்கு வேட்டி எவ்வாறு கட்டப்படும் என்பதைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி** **2.0** : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : அபிநயப் பாடல்களுக்கு அபிநயம் அமைத்து அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.2.2** : ''ஆசானாக நானிருந்தால்'' என்ற பாடலைப் பாடி அபிநயித்துக் காட்டுவோம்.

**பாட வேளைகள்** : 03

**தர உள்ளீடு** : பாடல் எழுதப்பட்ட அட்டை, ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவு நாடா இறுவட்டு, தட்டுக்கழி, தட்டுப்பலகை

**கற்றற் பேறுகள்** :

- ஆசானாக நானிருந்தால் எனும் பாடலைப் பாடுவார்.
- பாடலுக்கேற்பத் தாமே அபிநயம் அமைப்பார்.
- முத்திரைப் பிரயோகங்களைச் சரியாகப் பயன்படுத்துவார்.
- சிறந்த ஆசிரியரின் பண்புகளை அறிந்து கொள்வார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**:

- ♦ முன்னைய வகுப்புக்களில் கற்றிருந்த சின்னச் சின்னச் சிறுமியர் நாமே பாடலை அபிநயித்தல்.
- ♦ அவ்வாறே ''ஆசானாக நானிருந்தால்'' எனும் பாடலையும் அபிநயம் செய்வோம் எனக்கூறிப் பாடல் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ ஒலிப்பதிவு நாடாவைப் போட்டுக் காண்பித்தோ அன்றேல் ஆசிரியர் பாடியோ காண்பித்தல்.
- ♦ மாணவர் அவதானித்துப் பாடுதல்.
- ♦ பாடலின் பொருளுக்கேற்ப முத்திரைகளைப் பிரயோகிக்கவும், அபிநயிக்கவும் வழிகாட்டல்.
- ♦ மாணவர் தாமே அபிநயம் அமைத்தல் வேண்டும்.
- ♦ முழுமையாக மாணவரின் ஆக்கமாக இருக்க வேண்டும். ஆசிரியர் வழிகாட்டல் மட்டுமே வழங்க வேண்டும்.
- ♦ மாணவர்களை எண்ணிக்கைக்கேற்பத் குழுக்களாகப் பிரித்தும் பயிற்சியிலீடுபடச் செயதல்.
- ♦ பயிற்சியில் மாணவர் ஈடுபடும் போது தேவையெனில் அறிவுறுத்தல்களை வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**:

- பாடலை இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுவார்.

- அபிநயப் பாடலை முழுமையாகத் தகுந்த முத்திரைப் பிரயோகத்துடன் அபிநயிப்பார்.

- பாடலின் இராக, தாளத்தைக் கூறுவார்.

- பிரயோகித்த முத்திரைகளைக் கூறுவார்.

- ஏனைய குழுவினரின் ஆடல் பற்றிய விமர்சனத்தினை முன்வைப்பார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகள், கோலப்பயிற்சிகள், முத்திரைப் பிரயோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.3** : 5ஆவது, 6ஆவது தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : பாத நிலைகளுக்கான வரைபடங்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**கற்றற் பேறுகள்** :

- 5ஆவது, 6ஆவது தட்டடவினை அபிநயிப்பார்.
- அவற்றைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- ♦ 5ஆவது, 6ஆவது தட்டடவுகள் ஆதி தாளத்தில் இடம்பெறும் எனக் கூறுதல்.
- ♦ ஏனைய அடவுகளுக்குரிய கற்பித்தல் முறையினை இங்கே பின்பற்றவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- 5ஆவது, 6ஆவது தட்டடவின் சொற்கட்டைக் கூறுவார்.
- 5ஆவது, 6ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் அபிநயித்துக் காட்டுவார்.
- 5ஆவது, 6ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.
- தட்டடவு ஆடும் போது பின்பற்ற வேண்டிய பாத நிலை பற்றிக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகள், கோலப் பயிற்சிகள், முத்திரைப் பிரயோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.4** : 7ஆவது, 8ஆவது தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் ஆடுவோம்.

**பாட வேளைகள்** : 03

**தரஉள்ளீடு** : பாத நிலைகளுக்கான வரைபடங்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை

**கற்றற் பேறுகள்** :

- 7ஆவது, 8ஆவது தட்டடவுகளைத் திரிகாலங்களிலும் ஆடுவார்.
- அவற்றைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

♦ ஏனைய அடவுகளைப் போல் இதற்குரிய பயிற்சிகளையும் வழங்கவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- 7ஆவது 8ஆவது தட்டடவுகளின் சொற்கட்டைக் கூறுவார்.
- 7ஆவது 8ஆவது தட்டடவுகளினைத் திரிகாலங்களிலும் அபிநயிப்பார்.
- 7ஆவது 8ஆவது தட்டடவினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.
- தட்டடவு ஆடும் போது பின்பற்ற வேண்டிய பாத நிலை பற்றிக் கூறுவார்.
- 7ஆவது 8ஆவது அடவுகளிற் கிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமையினைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும். அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவுகள், கோலப்பயிற்சிகள், முத்திரைப் பிரயோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.5** : ஆடற் கோலங்களுக்குரிய பயிற்சியினைத் திஸ்ர, சதுஸ்ர ஜாதிகளிற் செய்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடு** : தட்டுக்கழி, தட்டுப்பலகை, தாளக்கருவி

**கற்றற் பேறுகள்** :

- தாளத்திற்கேற்ப ஆடலை மேற்கொள்வார்.
- வெவ்வேறு கோலங்களில் ஜாதிகளிற்கேற்ப அசைவுகளைச் செய்து காட்டுவார்.
- திஸ்ர, சதுஸ்ர ஜாதிகளை இனங்கண்டு கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ மாணவர்களின் இயல்பான நடையை நடக்கும் படி மாணவரை வழிப்படுத்தல்.
- ♦ தாள வாத்தியத்தை இசைத்தவாறோ அன்றித் தட்டுக்கழியின், நட்டுவாங்கத்திற் கேற்றவாறோ சாதாரண நடையினை மாணவர் நடத்தல்.
- ♦ தாளத்தின் வேகத்தைக் கூட்டி இசைத்து அதே நடையினை விரைவாக்குதல்.
- ♦ தாளத்திற்கேற்ப நடைகளை மேற்கொள்ளும் போது கிடைக்கும் அனுபவங்களைக் கேட்டறிந்து கலந்துரையாடுதல்.
- ♦ கால்களை மடித்துக் குதிக்கால் முதலிற் பட, முன்னே காலை நீட்டி வைத்துச் சீரான வேகத்தில் ஆசிரியர் நடத்தல்.
- ♦ தொடர்ந்து மாணவர் பயிற்சி செய்தல்.
- ♦ தகதிமி என்ற சொற்கட்டு சதுஸ்ர நடை ஆகும்.
- ♦ சதுஸ்ர நடையிற் தாளவாத்தியக் கருவியின் தாளத்தைப் பின்பற்றி நடத்தல்.
- ♦ தொடர்ந்து மாணவர் நடத்தல்.
- ♦ திரி காலங்களிலும் பயிற்சி செய்தல்.
- ♦ சதுஸ்ர ஜாதிப் பாடலை ஆசிரியர் பாடி அந்நடைக்கு ஏற்றவாறு வட்டமாக நடக்கச் செய்தல்.

- பல்வேறுபட்ட ஆடற்கோலங்களில் சதுஸ்ர நடையினை மேற்கொள்ளல்.
- இவ்வாறே திஸ்ர நடையிலும் பயிற்சியை மேற்கொள்ளல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- சதுஸ்ர ஜாதிச் சொற்கட்டு தகதிமி என்பதை அறிந்து பல்வேறு ஆடற் கோலங்களில் நடப்பார்.
- திஸ்ர ஜாதிச் சொற்கட்டு தகிட என்பதை அறிந்து பல்வேறு கோலங்களில் நடப்பார்.
- திஸ்ர, சதுஸ்ர ஜாதிகளை இனம் காண்பார்.
- சாதாரண நடை, கால்களை மடித்துக் குதிக்கால் பட நடக்கும் நடை ஆகியவற்றிற் கிடையிலான வேறுபாட்டை இனங்காண்பார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : முத்திரைப் பிரயோகங்களையும், அடவுப் பயிற்சிகளையும், கிராமிய நடனங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.1** : நாட்டடவு முதலாவதினை அபிநயிக்கப் பழகுவோம்.

**பாட வேளைகள்** : 04

**தர உள்ளீடு** : நாட்டடவின் படங்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை

**கற்றற் பேறுகள்** :

- காலை நாட்டிச் செய்வதால் நாட்டடவு எனப் பெயர்பெற்றது என்பதை ஏற்பார்.
- நாட்டடவினை அபிநயித்துக் காட்டுவார்.
- அதனைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- ♦ ஏற்கனவே மாணவர் கற்ற தட்டடவினை மீட்டல் செய்தல்.
- ♦ பரத நாட்டிய அடிப்படை அடவுகளில் இரண்டாவதாக இடம் பெறுவது நாட்டடவு எனக் கூறி இதற்கான பாத நிலை, அங்க நிலை பற்றி மாணவருடன் கலந்துரையாடுதல்.
- ♦ நாட்டடவின் எண்ணிக்கை எட்டு . அவையாவும் ஒரே சொற்கட்டில் அமைந்திருக்கும்.
- ♦ தர உள்ளீடுகளிற் தயாரிக்கப்பட்டுள்ள கற்பித்தற் துணைச் சாதனங்களைக் காட்சிப்படுத்தி விளக்குதல்.
- ♦ கைகளின் செய்கை இந்த அடவிலேயே ஆரம்பிக்கின்றது.
- ♦ முதலில் மாணவர்களுக்குக் காற் செய்கைகளை மட்டும் ஆடிக்காட்டுதலும் மாணவர் அவதானித்துப் பயிற்சியில் ஈடுபடுதலும்.
- ♦ படிப்படியாக விளம்ப, மத்திம, துரித காலங்களிற் காற்செய்கைகளுக்கான பயிற்சியளித்தல்.
- ♦ அடவின் கைச்செய்கையை நின்றபடி ஆசிரியர் அபிநயித்துக் காட்டுதல் மாணவர் அவதானித்துப் பயிற்சியிலீடு படுதல்.
- ♦ கைகளை முறையாக நாட்டியாரம்பத்தில் வைத்து அரைமண்டியில் அமர்ந்து காற்செய்கைகளுடன் கைச்செய்கைகளையும் இணைத்துப் பயிற்சியிலீடுபடுபடச் செய்தல்.
- ♦ அங்கசுத்தம், அரைமண்டி, கைகளின் செயற்பாடு, முத்திரை முதலியவற்றை அவதானித்துப் பயிற்சியில் ஈடுபடச்செய்தல்.

- ♦ அடவினை ஆசிரியர் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டலும் மாணவர் அவதானித்துக் கொலுப்பித்தலும்.
- ♦ தட்டடவிற்கும், நாட்டடவிற்குமான வித்தியாசத்தைக் கலந்துரையாடுக.

**கணிப்பீடும் மதிப்பீடும்**.

- நாட்டடவு என்ற சொல்லின் பொருளைக் கூறுவார்.
- நாட்டடவின் சொற்கட்டைக் கூறுவார்.
- நாட்டடவினைத் திரிகாலங்களிலும் ஆடிக், கொலுப்பித்துக் காட்டுவார்.
- நாட்டடவு என்ற பெயரின் காரணத்தைக் கூறுவார்.
- நாட்டடவில் கைகளின் செய்கை ஆரம்பமாவதைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும் அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : முத்திரைப் பிரயோகங்களையும், அடவுப் பயிற்சிகளையும், கிராமிய நடனங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.1.2** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவான நாட்டடவு இரண்டாவதினை அபிநயிக்கப் பழகுவோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடு** : நாட்டடவின் படங்கள், நாட்டடவிற் பிரயோகிக்கும் ஹஸ்தங்கள் எழுதப்பட்ட படம், தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**கற்றற் பேறுகள்** : நாட்டடவு இரண்டாவதினை அபிநயித்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- ♦ முதலாவது நாட்டடவிற்குரிய கற்பித்தல் செயன்முறையை இங்கு பயன்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- 2ஆவது நாட்டடவினை அபிநயித்துக் காட்டுவார்.
- 2ஆவது நாட்டடவினைத் திரிகாலங்களிலும் கொலுப்பித்துக் காட்டுவார்.
- அடவில் பிரயோகிக்கப்படும் முத்திரையைக் கூறுவார்.
- அடவில் கைகளை வைக்கும் நிலை நாட்டிய ஆரம்பம் என்பதைக் கூறுவார்.
- எட்டு நாட்டடவுகளும் ஒரே கொற்கட்டில் அமைந்திருக்கும் என்பதைக் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.4** : தியான ஸ்லோகம் பற்றி அறிவோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடு** : தியான ஸ்லோகம், கருத்து எழுதிய அட்டை,
தியான ஸ்லோகத்தில் அடங்கும் முத்திரைகள் ஒட்டப்பட்ட
படங்கள்.

**கற்றற் பேறுகள்** :

- தியான ஸ்லோகத்தின் கடவுள், அதன் முக்கியத்துவம் என்பவற்றைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

♦ பரத நாட்டியத்தின் முழு முதற் கடவுள் சிவபெருமான் என்பதனையும், அவரின் தோற்றம், பொலிவு பற்றி மாணவர்கள் அறிந்துள்ள விடயங்கள் பற்றியும் கலந்துரையாடுதல்.

♦ பரத நாட்டியத்தின் முழு முதற் கடவுளைத் தியானித்துக் கூறும் ஸ்லோகம் தியான ஸ்லோகம் எனக் கூறுதல்.

♦ சிவபெருமானின் தோற்றப் பொலிவு பற்றி எடுத்துரைத்தல்.

♦ தியான ஸ்லோகம் வடமொழியில் அமைந்துள்ளமை பற்றிக் கூறுதல்.

♦ தியான ஸ்லோகம் அதன் கருத்து எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.

♦ காட்சிப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு மாணவர்
  - ஸ்லோகத்தைக் கூறுதல்.
  - கருத்தினைக் கூறுதல்.
  - இடம் பெறும் ஹஸ்தங்களைக் கூறுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தியான ஸ்லோகத்தின் முக்கியத்துவத்தைக் கூறுவார்.
- தியான ஸ்லோகத்தில் இடம்பெறும் அஸம்யுத, ஸம்யுத, அபூர்வ ஹஸ்தங்களைக் குறிப்பிடுவார்.
- தியான ஸ்லோகத்தையும் அதன் கருத்தையும் கூறுவார்.
- தியான ஸ்லோக இறைவனின் பெயரைக் கூறுவார்.
- ஸ்லோகம் அமைந்துள்ள மொழியைக் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பானஅடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங் கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.5** : ''தண்டியம்'' என்னும் விடயத்தை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : பயிற்சி உபகரணம்

**கற்றற் பேறுகள்** :

- தண்டியம் என்பதன் விளக்கத்தைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

- ♦ ஒருவர் நிமிர்ந்த நிலையில் நிற்பதற்குச் செய்யப்படக் கூடிய பயிற்சிகளைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ தண்டியம் என்பது ஒரு போல்.
- ♦ ஐந்தாவது ஆண்டில் தண்டியம் பிடித்த நடன மாணவர் ஏழு ஆண்டுகள் பயிற்சி பெற்று பன்னிரண்டாவது ஆண்டில் அரங்கேறுவர் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. தேவரடியார்கள் எனப்படும் அக்கால நடன மாதர் 'சிலம்பக் கூடம்' என்றழைக்கப்பட்டது. விஜயதசமியன்று சிலம்பக் கூடத்தில் சதுரமாக நெல் பரப்பி நாட்டியம் கற்றுக் கொள்பவரை நாட்டிய ஆரம்ப முறைக்கேற்ப அரைமண்டியில் நிற்க வைத்துப் பட்டுத்துணியால் சுற்றியிருக்கும் கோலைப் (தண்டியம்) பூசை செய்து கையிற் கொடுப்பர். அக்கோவை நாட்டியம் கற்றுத் தேர்ந்த சற்று வயது முதிர்ந்த தேவரடியார்கள் இரு புறமும் பிடித்துக் கொண்டு மாணவியின் கையைக் கோலின் நடுவே பிடிக்க வைத்து, குரு முதல் அடவை மாணவியின் காலைப் தெய்யாதய் என்று அழுத்தமாக நெல்லின் மேல் அடித்துக் கற்றுக் கொடுப்பார் என்று தேவரடியார்களின் நாட்டியத் தொடக்கப் பயிற்சி முறையிற் சொல்லப்படுகிறது.
- ♦ சிங்கள நடனப் பாரம்பரியத்தில் தண்டியம் என்பது நடனக் கலைஞர் மண்டிய(அரை மண்டி) என்னும் நிலைக்குச் சென்று பாசறம்ப என்னும் அடவுப் பயிற்சியை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் தடியைக் குறிக்கின்றது.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தண்டியம் என்பதன் கருத்தினைக் கூறுவார்.
- தண்டியம் என்பதைப் பயன்படுத்தும் விதத்தினைக் கூறுவார்.
- தண்டியம் பற்றி முதன் முதலில் இடம்பெற்ற நூலின் பெயரைக் கூறுவார்.
- தண்டியம் பிடிக்கும் சந்தர்ப்பத்தினைக் கூறுவார்.
- தண்டியம் பிடிக்கும் போது செய்யப்படும் செயல் முறைகளைப் பட்டியற் படுத்துவார்.

**உசாத்துணை நூல்கள்**


தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் (பேராசிரியர் வி. சிவசாமி)

நடனக் கலைக் களஞ்சியம் (முனைவர் சே.இரகுராமன்)

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் எண்ணக்கருக்களையும், அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.1** : தட்டடவு பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடுகள்** : தட்டடவிற்குரிய சொற்கட்டுக்கள் அடங்கிய அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- பாதங்களைத் தட்டிச் செய்வதால் தட்டடவு எனப் பெயர் பெற்றது என்று அறிவார்.
- இவ்வடவின் அடிப்படை நிலை அரைமண்டி என்று கூறுவார்.
- தட்டடவு எட்டு வகைப்படும் எனக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

- ♦ மாணவர்கள் செய்முறையிற் கற்ற தட்டடவினை நினைவு கூர்தல்.
- ♦ பாதங்களை நிலத்திற் தட்டி ஆடுவதால் தட்டடவு எனப் பெயர் பெற்றது.
- ♦ தட்டடவு அரைமண்டி நிலையில் ஆடப்படுகிறது.
- ♦ தட்டடவு 8 வகைப்படும்.
- ♦ தட்டடவு அரைமண்டி நிலையிலேயே ஆடப்படுகிறது.
- ♦ 3ஆவது, 8ஆவது தட்டடவுகள் ரூபக தாளத்திலும் ஏனையவை ஆதி தாளத்திலும் இடம் பெற்றுள்ளது.
- ♦ தட்டடவு சம்பந்தமான குறிப்புக்களை எடுக்க வழிப்படுத்துங்கள்.
- ♦ தட்டடவிற் காற்செய்கைகள் மாத்திரமே இடம் பெறும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- காலைத் தட்டி அபிநயிப்பது தட்டடவு எனக் குறிப்பிடுவார்.
- தட்டடவின் நிலை அரைமண்டி என்பதைக் கூறுவார்.
- தட்டடவின் சொற்கட்டினை எழுதிக் காட்டுவார்.
- ஆதி, ரூபக தாளங்களில் அமைந்துள்ளதைக் குறிப்பிடுவார்.
- தட்டடவினை வரைவிலக்கணப்படுத்துவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் எண்ணக்கருக்களையும், அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3.1** : 1ஆவது 2ஆவது தட்டடவுகளின் சொற்கட்டினையும் அதன் தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடு** : தட்டடவின் சொற்கட்டு எழுதிய அட்டை, தாள அங்கக் குறியீடு எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- தட்டடவுகளின் சொற்கட்டை அறிவார்.
- தட்டடவின் தாள அங்கக் குறியீட்டை எழுதுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- ♦ மாணவர் ஏற்கனவே செய்முறைப் பகுதியில் கற்ற தட்டடவினை மீட்டல் செய்து கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- ♦ ஆசிரியர் கொலுப்பித்துக் காட்டிக் கீழ்வரும் விடயங்களை நினைவுபடுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுதல்.
- ♦ ஆதிதாளத்தின் அங்க அடையாளம் 100 லகு - த்ருதம் - த்ருதம்.
- ♦ ஆதி தாளத்தின் அட்சர எண்ணிக்கை 8.
- ♦ லகுவின் செயற்பாடு தட்டி சின்னவிரல் மோதிர விரல், நடுவிரல் என எண்ணுதல்.
- ♦ லகுவின் குறியீடு 1.
- ♦ ஜாதிகளுக்கேற்ப லகுவின் எண்ணிக்கை மாறுபடும்.
- ♦ த்ருதத்தின் செயற்பாடு தட்டித் திருப்புதல்.
- ♦ த்ருதத்தின் அங்க அடையாளம் 0.
- ♦ ஒரு தட்டில் 4 மாத்திரைகள் அடங்கியுள்ளன.
- ♦ ஆதி தாளத்தினை ஆசிரியர் கொலுப்பித்துக் காட்டுதலும் மாணவர் அவதானித்துக் கொலுப்பித்தலும்.
- ♦ தாள அட்டவணையைக் காட்சிப்படுத்தி விளக்குதல்.
- ♦ 1ஆவது தட்டடவினை ஆசிரியர் கொலுப்பித்துக் காட்டுதலும் மாணவர் அவதானித்துக் கொலுப்பித்தலும்.

- முதலில் சொற்கட்டை மாத்திரம் எழுதுவதற்குப் பயிற்றுவிக்கவும்.
- லகுவில் அடங்கும் சொற்கட்டினை ஆசிரியர் போட்டுக் காட்டுதல்.
- மாணவர் அவதானித்துக் குறிப்பெடுத்தல்.
- இவ்வாறு மத்திம, துரித காலங்களில் ஆசிரியர் எழுதப் பணித்தல்.
- மாணவர் சுயமாக விளங்கி எழுத இடமளித்து ஆசிரியர் அவதானித்தல்.
- இடர்ப்படும் மாணவரை அவதானித்து நெறிப்படுத்தல்.
- இறுதியாகக் குறியீட்டை எழுதுவதற்குப் பயிற்சியளிக்கவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தட்டடவின் சொற்கட்டைக் குறிப்பிடுவார்.
- ஆதி தாளத்தின் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
- 1ஆவது, 2ஆவது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவார்.
- எழுதியதைக் கொலுப்பிப்பார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் எண்ணக்கருக்களையும், அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3.2** : 3ஆவது தட்டடவின் சொற்கட்டினையும் அதன் தாள அங்கக் குறியீட்டினையும் அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தரஉள்ளீடு** : தட்டடவின் சொற்கட்டு எழுதிய அட்டை, தாள அங்கக் குறியீடு எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்** :

- 3ஆவது தட்டடவின் சொற்கட்டைக் கொலுப்பிப்பார்.
- 3ஆவது தட்டடவின் தாள அங்கக் குறியீட்டை எழுதுவார்.

**கற்றல் கற்பித்த் செயலொழுங்கு** :

- ♦ மாணவர் ஏற்கனவே செய்முறைப் பகுதியில் கற்ற தட்டடவின் தாளத்தினை மீளவலியுறுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- ♦ தட்டடவின் சொற்கட்டை ஆசிரியர் கொலுப்பித்துக் காட்டி கீழ்வரும் விடயங்களை நினைவுபடுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுதல்.
  - ரூபக தாளத்தின் அங்க அடையாளம் (0)` த்ருதம், லகு(1).
  - ரூபக தாளத்தின் செயற்பாடு.
  - லகுவின் அங்க அடையாளம் |
  - ரூபக தாளத்தின் அடையாளம் 0$|_4$
  - லகுவின் செயற்பாடு தட்டி சின்னவிரல், மோதிர விரல், நடுவிரல் என எண்ணுதல்.
  - 3ஆவது தட்டடவின் சொற்கட்டு தெய்யா தெய்யா தெய்.
- ♦ தாள அட்டவணையைக் காட்சிப்படுத்தி விளக்குதல்.
- ♦ மேற்கொண்டு ஏனைய அடவுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறையினை இங்கே பயன்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- 3ஆவது தட்டடவின் சொற்கட்டைக் குறிப்பிடுவார்.
- ரூபக தாளத்தின் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
- 3வது தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.
- 1ஆவது, 2ஆவது தட்டடவிற்கும் 3ஆவது தட்டடவிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் எண்ணக்கருக்களையும், அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3.3** : 4ஆவது, 5ஆவது, 6ஆவது, 7ஆவது, 8ஆவது தட்டடவுகளின் தாள அங்கக் குறியீட்டினை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தரஉள்ளீடு** : தட்டடவின் சொற்கட்டு எழுதிய அட்டை, தாள அங்கக் குறியீடு எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள்** :

- 4ஆவது, 5ஆவது, 6ஆவது, 7ஆவது, 8ஆவது தட்டடவுகளின் சொற்கட்டினைக் குறிப்பிடுவார்.
- அவற்றின் தாள அங்கக் குறியீட்டினை எழுதுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

- ♦ ஏனைய அடவுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறையினை இங்கே பயன்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- 4ஆவது, 5ஆவது, 6ஆவது, 7ஆவது, 8ஆவது தட்டடவுகளின் சொற்கட்டினைக் குறிப்பிடுவார்.
- ஆதிதாளத்தின் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
- 4வது, 5வது, 6வது, 7வது, 8வது தட்டடவுகளினைத் தாள அங்க குறியீட்டுடன் எழுதுவார்.
- எழுதியவற்றைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களையும், நாட்டடவிற்குரிய தாளத்தினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.1** : நாட்டடவு பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடு** : நாட்டடவின் நிலைகள் அடங்கிய படங்கள், பாவிக்கப்படும் முத்திரைகள் பற்றிய அட்டவணை

**கற்றற் பேறுகள்** :

- நாட்டடவு முழுவதும் ஆதி தாளத்தில் அமைந்துள்ளமையையும் ஒரே மாதிரியான சொற்கட்டுப் பிரயோகம் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் ஏற்பார்.
- தட்டடவிற்கு அடுத்ததாக முதலில் கைப்பிரயோகம் இடம் பெறும் அடவு என்பதைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- ♦ மாணவர்கள் செய்முறையிற் கற்ற நாட்டடவினை நினைவு கூர்தல்.
- ♦ இதன் சொற்கட்டு தெய்யும் தத்த தெய்யும் தாம்.
- ♦ இவ்வடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
- ♦ எட்டு அடவுகள் உண்டு.
- ♦ அடவுகளுக்குப் பாவிக்கப்படும் முத்திரை அட்டவணைகளைக் காட்சிப்படுத்தல்.
- ♦ காலினை நாட்டி அபிநயிப்பதால் நாட்டடவு என அழைக்கப்படும்.
- ♦ கைச் செய்கை முதலில் ஆரம்பிக்கும் அடவு நாட்டடவு ஆகும்.
- ♦ கைகள் வைக்கப்படும் ஆரம்பநிலை நாட்டியாரம்பம் ஆகும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**.

- காலை நாட்டியும் கைகளைப் பிரயோகித்தும் அபிநயிக்கப்படுவது நாட்டடவு என்பதனைக் குறிப்பிடுவார்.
- நாட்டடவிற் பயன்படுத்தப்படும் முத்திரைகளையும், சொற்கட்டினையும் குறிப்பிடுவார்.
- நாட்டடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளதைக் குறிப்பிடுவார்.
- அடவுகளில் கைச் செய்கை ஆரம்பிக்கும் முதல் பகுதி நாட்டடவு என்பதைக் குறிப்பிடுவார்.
- எழுதியவற்றைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களையும், நாட்டடவிற்குரிய தாளத்தினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.2** : நாட்டடவிற்குரிய சொற்கட்டைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடு** : சொற்கட்டு, தாள அங்கக் குறியீட்டுடன் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்** :

- நாட்டடவிற்குரிய சொற்கட்டினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

♦ ஏனைய அடவுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறையினை இங்கேயும் பயன்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாட்டடவின் சொற்கட்டைக் கூறுவார்..
- ஆதி தாளத்தின் அங்கங்களை அறிவார்.
- நாட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவார்.
- கைகள் வைக்கப்படும் ஆரம்ப நிலையின் பெயரைக் குறிப்பிடுவார்.
- அடவுகளுக்குப் பாவிக்கப்படும் முத்திரைகளை அட்டவணைப் படுத்துவார்.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களையும், நாட்டடவிற்குரிய தாளத்தினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.3** : நாட்டியக்கிரமம் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 01

**தர உள்ளீடு** : நாட்டியக்கிரமம் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள்** :

- நாட்டியக்கிரமம் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நாட்டியக்கிரமத்திற்குரிய ஸ்லோகத்தைக் கூறுவார்.
- அதன் பொருள் கூறுவார்.
- நாட்டியத்தில் அங்கங்களின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்வார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

♦ நாட்டியத்தில் அங்கங்களின் முக்கியத்துவம் தொடர்பாகக் கலந்துரையாடவும்.

♦ நாட்டியக்கிரமம் என்பது நாட்டியம் செய்யும் ஒழுங்கு முறையகும்.

யதோ ஹஸ்தத் ததோ திருஸ்டி
யதோ திருஸ்டி ததோ மனஹ
யதோ மனஸ் ததோ பாவஹ
யதோ பாவஸ் ததோ ரஸஹ

பொருள் - கைகள் எங்கு செல்கின்றதோ அங்கது கண்கள் செல்ல வேண்டும் கண்கள் எங்கு செல்கின்றதோ அங்கு மனம் செல்ல வேண்டும். மனம் எங்கு செல்கின்றதோ அங்கு பாவம் செல்ல வேண்டும். பாவம் எங்கு செல்கின்றதோ அங்க ரஸம் இருக்க வேண்டும்.

ஆஸ்யே நாலம்பயேத் கீத் ஹஸ்தே நார்த்தம்ப்ர தர்ஷயேத்
சதுர்யாம் தர்ஷயேத் பாவம் பாதாப்யாம் தாளமதாபைேத்

பொருள் - பாட்டினை வாயினால் இசைக்க வேண்டும். கைகளினால் கருத்தை வெளிப்படுத்த வேண்டும். இரு கண்களாலம் பாவத்தைக் காட்ட வேண்டும். இரு கால்களாலும் தாளத்தைப் போட வேண்டும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நாட்டியக்கிரமம் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நாட்டியக்கிரமத்திற்குரிய ஸ்லோகத்தைக் கூறுவார்.
- அதன் பொருள் கூறுவார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சிமட்டம் 5.1** : நடனக்கலைக்குத் தொண்டாற்றியோர் பற்றி அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.1.1** : கோயில் நடனமாதர்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : கோயில் நடனமாதர்களின் படங்கள்

**கற்றற் பேறுகள்** :

- கோயிலிற் கலைப்பணி புரிந்தோர் கோயில் நடனமாதர் என்பதைக் குறிப்பிடுவார்.
- நடனக் கலையின் வளர்ச்சிக்கு அடிப்படையானவர்கள் என்பதைகோயில் நடனமாதர்கள் என்பதைக் குறிப்பிடுவார்.
- தேவரடியாரில் பல்வேறு பிரிவினர் இருந்தனர் என்பதைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

♦ கோயில் நடனமாதர்களின் படங்களைப் பார்வையிடச் செய்தல்.

♦ பார்வையிட்ட படங்களைக் கொண்டு கோயில் நடன மாதர்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.

♦ கோயில் நடன மாதர்களைத் தேவதாசிகள், தேவரடியார்கள் என அழைத்தல்.

♦ தேவதாசி என்பதற்கு இறைவனின் பணிப்பெண் என்பது பொருள்.

♦ இவர்கள் இசை, நாட்டியத்திற் தேர்ச்சி பெற்றவர்கள்.

♦ கோயிற் திருப்பணிகளுக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள்.

♦ இவர்கள் ரிஷபதளியார், தேவரடியார், தளிச்சேரிப் பெண்டுகள், கூத்திகள் என்னும் பெயர்களால் போற்றப்பட்டனர்.

♦ இவர்களைப் பற்றி அப்பரும் சுந்தரரும் திருப்பதிகங்களில் உயர்வாகக் கூறியுள்ளனர்.

♦ தஞ்சைப் பெரிய கோவிலில் 407 தேவரடியார்கள் கலைப்பணி புரிந்துள்ளனர்.

♦ இவர்கட்கு மன்னர்கள் மானியமும், பட்டங்களும் வழங்கியுள்ளனர்.

- மேலே கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பற்றிக் குறிப்புக்களைக் கொடுத்தல்.

- கொடுக்கப்பட்ட குறிப்புக்களில் இருந்து குறுவினாவிடைகளைத் தயாரிக்கும் படி கூறி வினாவிடைப் போட்டியை நடத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- கோயில் மாதர்கள் என்பவர்கள் யார் என்பதனைக் குறிப்பிடுவார்.

- அவர்கள் ஒவ்வொருவர்களதும் நிலைக்கேற்ப வழங்கப்பட்ட பெயர்களைக் குறிப்பிடுவார்.

- கோயில்களில் அவர்களைப் பணிக்காக அமர்த்தியதன் நோக்கத்தைக் குறிப்பிடுவார்.

- அவர்களின் மறுபெயர்களைக் கூறுவார்.

- இவர்களைப் பற்றிக் திருப்பதிகங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கூறுவார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசார, பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : கிராமிய நடனங்களைப் பற்றி அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.2.1** : கிராமிய நடனங்களின் வகைகளை அறிந்து கூறுவோம்.

**பாட வேளைகள்** : 02

**தரஉள்ளீடு** : கிராமிய நடனங்களின் பிரிவுகள் எழுதப்பட்ட அட்டைகள், படங்கள், காண் ஒளி இறுவட்டு

**கற்றற் பேறுகள்** :

- கிராம மக்களின் பண்புசார் விழுமியங்களைக் கூறுவார்.
- கிராமிய மக்கள் சந்தர்ப்பங்களுக்கேற்ப வெளிப்படுத்தும் கலாசார ஆக்கங்களைக் குறிப்பிடுவார்.
- கிராமியக் கலைகள் மக்கள் வாழ்க்கையோடு பிணைந்துள்ளதை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

- ♦ தர உள்ளீடுகளைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ பார்வையிட்ட விடயங்கள் தொடர்பாகவும், மாணவர் ஏற்கனவே பெற்ற அனுபவங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுதல்.
- ♦ கிராமிய நடனங்களில் அவர்கள் நயத்தல் அலகிற் கற்ற அனுபவங்களைக் கொண்டு கும்மி, காவடி ஆகிய கிராமிய நடனங்களில் அவதானித்தவற்றையும் கேட்டறிதல்.
- ♦ பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

  - அன்றாடம் இடம்பெறும் நிகழ்வுகளிற் கலை அம்சங்கள் நிறைந்திருக்கின்றன.
  - பிறப்பிற் தாலாட்டிலிருந்து இறப்பில் ஒப்பாரி வரை கிராமிய வாழ்க்கை இரசனை மிக்கதாகத் திகழ்கின்றது.

- ♦ மக்கள் வாழ்வியலின் அம்சங்களில் எச்சந்தர்ப்பங்களில் என்னென்ன நடனங்கள் இடம்பெறுகின்றன என்பதைப் பிரிவுகள் எழுதப்பட்ட அட்டை மூலம் விளக்குங்கள்.

  இவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

  - மகிழ்ச்சிக்காக ஆடப்படுபவை. கும்மி, கோலாட்டம், கரகம், காவடி.

- வேண்டுதலுக்காக ஆடப்படுபவை.

- தொழில் சார்ந்து ஆடப்பெறுபவை. அரிவுவெட்டு, மீனவ நடனம், தேயிலைக் கொழுந்து நடனம்.

- தொழில் சார் நடனங்கள் - அரிவிவெட்டு, மீனவ நடனம், தேயிலைக் கொழுந்து நடனம்.

- தொழிலைச் சித்திரித்து ஆடும் நடனம் தொழில் சார் நடனம் ஆகும்.

- மகிழ்ச்சிக்காக இடம்பெறும் நடனங்கள் - கும்மி, கோலாட்டம்.

- பொழுது போக்கிற்காக இடம்பெறும்.

- வேண்டுதலுக்குரிய நடனங்கள் - காவடி, கரகம்.

- நேர்த்திக்கடனுக்காக இடம்பெறும்.

♦ இயலுமெனில் மாணவரை மூன்று குழுக்களாகப் பிரித்து அக்குழுக்களுக்குப் பெயரிடுங்கள்.

- குழு 1 மகிழ்ச்சிக்குரிய நடனங்கள்.

- குழு 2 வேண்டுதலுக்குரிய நடனங்கள்.

- குழு 3 தொழில்சார் நடனங்கள்.

♦ ஒவ்வொரு குழுவும் எழுதியவற்றை வாசித்துக் காட்டி ஏனைய குழு மாணவரும், ஆசிரியரும் அவதானித்துக் கருத்துக் கூறலாம்.

♦ சுருக்கக் குறிப்புக்களை மாணவர் முழுமையாக்குவதை உறுதி செய்து பயிற்சிப் புத்தகங்களைப் பார்வையிடுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**.

- கிராம மக்களின் வாழ்வியல் அம்சங்களைக் குறிப்பிடுவார்.
- அவர்களது கலைச் செயற்பாடுகளைக் குறிப்பிடுவார்.
- நடனங்களை வகைப்படுத்தி எழுதுவார்.
- வகைப்படுத்தப்பட்ட மூன்று பிரிவுகளிலும் அடக்கப்பட்டுள்ள நடனங்களைப் பெயரிடுவார்.
- அவை ஆடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.

# மூன்றாம் தவணை

**தேர்ச்சி 1.0** : சூழலை இரசித்துத் தாம் நயந்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : பரத நாட்டியத்தின் ஆடை, அணிகளை இரசிப்பார்.

**செயற்பாடு 1.3.1** : பரத நாட்டிய ஆடை அணிகளில் நயந்தவற்றை வெளிப்படுத்துவோம்.

**பாட வேளைகள்** : 02

**தரஉள்ளீடு** : பல்வேறு வகையான பரத நாட்டிய ஆடைகளைக் காட்டும் புகைப்படங்கள், சஞ்சிகைகள், காணொளி, இறுவட்டுக்கள்.

**கற்றற் பேறுகள்** : பரத நாட்டியத்திற்குப் பயன்படுத்தப்படும் வெவ்வேறு வகையான ஆடை அணிகளைப் பற்றிக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

♦ மாணவர்கள் அறிந்துள்ள பரத நாட்டிய ஆடை அணிகள் தொடர்பாகக் கலந்துரையாடல்.

- பரத நாட்டியத்திற்கென ஏற்படுத்தப்பட்ட பிரத்தியேகமான ஆடைகள்.

- கோயிற் பூசகர் இடுப்பில் அணிகின்ற பஞ்சகச்சம் போன்ற ஆடையே பரத நாட்டியத்திற்கு ஆரம்ப, இடைக்காலங்களில் அணியப்பட்டு வந்தமை.

- பரத நாட்டியத்திற்குரிய Costiume என்றழைக்கப்படுவதும் பஞ்சகச்சம் போன்றதே. ஆயினும் உடலோடு ஒட்டியவாறு பிஜாமாவும் முன்னால் விசிறி மடிப்பும் (Fan) Bask எனும் இடுப்பைச் சுற்றி இறுக்கமாகத் தைக்கப்பட்ட துண்டும், ரவிக்கை, தாவணி ஆகியனவும் சேர்ந்து Costiume எனப்படும். அவ்வாறே பாவாடையும், தாவணியும் விசிறிமடிப்பும், Fan, Bask ஆகியனவும் சேர்ந்து அணியப்படும் ஆடையும் (பாவாடை Costume) தற்போது வழக்கிலுள்ளது.

- பரதநாட்டியம் ஆடும் போது அணியப்படும் அணிகலன்கள் - உச்சிப்பட்டம், நெற்றிப்பட்டம், சிமிக்கி, மயிர்மாட்டி, தோடு, சந்திரபிறை, சூரியபிறை, ராக்கொடி, ஒட்டியாணம், வளையல், மூக்குத்தி, பிலாக்கு, சலங்கை, பதக்கம், வங்கி என்பன.

- பொருத்தமான வர்ணம் (Colour) உரிய அணிகலன்களை அணிந்து தகுந்த முகப்பூச்சுடன் மிளிரும் ஒரு நடனப் பெண்ணிற்கும் அவ்வாறின்றி ஒரு சாதாரண அணிகலன், முகப்பூச்சு இன்றி மற்றும் சாதாரண ஆடை அணிந்து உள்ள பெண்ணிற்குமிடையேயுள்ள வேறுபாட்டைக் கூறுதல். (ஆடை,ஆபரணங்களே முதலிற் பார்ப்போருக்கு கவர்ச்சியையும், இரசனையையும் கொடுக்கின்றன)

- நாட்டியப் பெண் நடன மேடைக்கு வரும் போது பார்ப்பவர் மனதில் ஏற்படும் உணர்ச்சி (இரசனை) தனிநபர்களுக்கேற்ப வேறுபடும் தன்மை.

- சந்திரபிறை தலையின் இடது பக்கமும் சூரியபிறை வலப்பக்கமும் அணிதல். இதை நடராஜருடன் தொடர்புபடுத்தி விளக்குதல்.

- வெவ்வேறு வடிவில் அமைக்கப்பட்ட பரத நாட்டிய உடைகளைக் காட்சிப்படுத்தி (தொலைக்காட்சி மூலமோ அன்றேல் நேரடியாகவோ) இரசனையைத் தூண்டவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- நடன நிகழ்ச்சியில் அணியப்படும் ஆடைகளில் தாம் நயந்தவற்றைக் குறிப்பிடுவார்.
- ஆடைகளின் வேறுபாட்டை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- அணியப்படும் அணிகலன்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- அணிகலன்கள் அணியப்படும் உடற்பாகங்களைக் குறிப்பிடுவார்.
- சந்திரபிறை, சூரியபிறையை நடராஜருடன் தொடர்புபடுத்திக் கூறுவார்.

**தேர்ச்சி 2.0** : சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : வெவ்வேறு வகையான பாடல்களுக்கு அபிநயம் அமைத்துத் தாமே கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.3.1** : காவடி நடனத்தை ஆக்கி அபிநயிப்போம்.

**பாட வேளைகள்** : 05

**தரஉள்ளீடு** : பாடல் எழுதப்பட்ட அட்டை, காவடி நடனம் ஆடும் படங்கள்.

**கற்றற் பேறுகள்** :

- காவடி நடனம் முருகனுக்கே உரிய சிறப்பான நடனம் எனக் கூறுவார்.
- பரத நாட்டியமல்லாத பாதச் சுவடுகளை அறிந்திருப்பார்.
- காவடி நடனச் சுவடுகளைக் கிராமியப் பாங்குடன் ஆடுவார்.
- காவடி நடனத்திற்குரிய பாடலைப் பாடி அதற்கேற்ப ஆடற்கோலங்களை அமைப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

♦ கிராமங்களுக்கே உரிய பண்புகள், பண்பாடுகள் பற்றி ஏற்கனவே கற்ற கிராமிய நடனங்களுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.

♦ காவடிப் படங்கள் அடங்கிய அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.

♦ முன்பே பார்த்து இரசித்த கிராமிய நடனங்களின் சிறப்பம்சங்களை வினவுதல்.

♦ தெரிவு செய்த காவடி நடனத்திற்குரிய பாடலை ஆசிரியர் பாடிக்காட்டுதல்.

♦ மாணவர் செவிமடுத்துத் தொடர்ந்து பாடச் சந்தர்ப்பம் வழங்குதல்.

♦ பின்வருவன பற்றிக் கவனத்தில் கொள்க.

- காவடியைத் தோளில் வைத்து ஆடுவதற்குப்பதிலாக இரு கைகளிலும் சிகர முத்திரை பிடித்துக் தோள்களிலே வைத்துக் காவடிப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

- பரத நாட்டிய அடவுகளின் பாத அசைவுகளை மேற்கொள்ளாது கிராமியப் பாங்கான காவடி நடன ஆடலை ஆடச் செய்தல்.

- பல்வேறு ஆடற்கோலங்களில் ஆடுதல்.

♦ மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துப் பயிற்சியில்

ஈடுபடச் செய்யலாம்.

- ♦ ஒரு குழு பாட மற்றைய குழு ஆடவும் வழிப்படுத்தி, விமர்சனங்களை முன்வைக்க ஊக்குவிக்கலாம்.

- ♦ பக்தி உணர்வுடன், ஒத்திசைவுடன், ஒழுங்காக மேடையை விட்டு வெளியேறும் வரை ஆடி நிறைவு செய்வதைக் கவனித்துப் பாராட்டுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- காவடி நடனப் பாடலைப் பாடுவார்.
- காவடி நடனம் முருகக் கடவுளுக்கே உரிய சிறப்பான நடனம் என்பதைக் கூறுவார்.
- கிராமிய நடனச் சுவடுகளைக் காவடி நடனத்திற் பிரயோகித்து ஆற்றுகைப்படுத்துவார்.
- வேண்டுதலுக்காக ஆடப்படும் காவடி நடனத்தினைப் பல்வேறு கோலங்களில் ஆடி நிறைவு செய்வார்.
- காவடி நடனத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 3.0** : பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சிமட்டம் 3.3** : முத்திரைப் பிரயோகங்களையும், அடவுப் பயிற்சிகளையும். கிராமிய நடனங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.1.3** : பரத நாட்டியத்தின் அடிப்படை அடவான நாட்டடவு மூன்றாவதினையும் நான்காவதினையும் அபிநயிக்கப் பழகுவோம்.

**பாட வேளைகள்** : 08

**தரஉள்ளீடு** : நாட்டடவின் ஸ்தான நிலைகள் அடங்கிய படங்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை.

**கற்றற் பேறுகள்** :

- நாட்டடவு மூன்றாவதினையும் நான்காவதினையும் அபிநயிப்பார்.
- அவற்றைக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- ♦ ஏனைய அடவுகளுக்கு மேற்கொண்ட கற்றல் - கற்பித்தல் முறையினை இங்கே மேற்கொள்ளவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்** :

- நாட்டடவின் சொற்கட்டைத் திரிகாலங்களிலும் கொலுப்பிப்பார்.
- 3ஆவது, 4ஆவது நாட்டடவுகளைத் திரிகாலங்களிலும் அபிநயித்துக் காட்டுவார்.
- பிரயோகிக்கப்படும் முத்திரைகளைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்ப தசைநார்ப் பயிற்சிகளையும் அடவுகளையும் அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** முத்திரைப் பிரயோகங்களையும், அடவுப் பயிற்சிகளையும் கிராமிய நடனங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.2 :** இரட்டைக் கை முத்திரைகளை அபிநயித்துக் காட்டுவோம்.

**பாட வேளைகள் :** 04

**தரஉள்ளீடு :** இரட்டைக்கை முத்திரைகள் அடங்கிய அட்டை, முத்திரைகளின் காணொளி இறுவட்டு, முத்திரைகளின் கருத்துக்கள் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற் பேறுகள் :**

- இரு கைகளையும் பயன்படுத்திச் செய்யப்படுவது இரட்டைக் கை முத்திரை எனக் கூறுவார்.
- இரட்டைக் கை முத்திரைகளைச் சமஸ்கிருத உச்சரிப்பிற் கூறுவார்.
- இரட்டைக் கை முத்திரைகளை அபிநயித்துக் காட்டுவார்.
- முத்திரைகளின் கருத்தினைக் கூறுவார்.
- ஒற்றைக் கை முத்திரைகள் இரண்டினைச் சேர்த்தால் உருவாகும் முத்திரைகளை இனம் காண்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ முன்னர் கற்ற ஒற்றைக் கை முத்திரைகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ இரட்டைக் கை முத்திரைகளின் படங்கள் அடங்கிய அட்டையையோ , காணொளி இறுவட்டினையோ காட்சிப்படுத்தல்.
- ♦ பார்வையிட்ட முத்திரைகளைப் பற்றியும், ஒற்றைக் கை முத்திரைகளுக்கும், இரட்டைக்கை முத்திரைகளுக்குமிடையிலுள்ள வேறுபாடுகள், ஒருமைப்பாடுகள் பற்றியும் கலந்துரையாடுதல்.
- ♦ இரண்டு கைகளையும் பயன்படுத்திச் செய்யும் முத்திரைகள் இரட்டைக் கை முத்திரைகள் ஆகும்.
- ♦ இதன் மறுபெயா் ஸம்யுத ஹஸ்தம் ஆகும்.
- ♦ இதில் 24 முத்திரைகள் உண்டு.
- ♦ இரட்டைக் கை முத்திரைகளைச் சமஸ்கிருத உச்சரிப்பில் கூறுதல்.
- ♦ அவற்றின் கருத்தினைக் கூறல்.
- ♦ இரட்டைக் கை முத்திரைகளை ஆசிரியா் செய்து காட்ட மாணவா்கள்

பின்பற்றிச் செய்தல்.

- ♦ குழுவாகப் பிரித்து ஒரு குழு அபிநயிக்க மறுகுழுவைப் பார்வையிடச் செய்தல்.

- ♦ ஒற்றைக் கை முத்திரைகள் இரண்டினைச் சேர்த்தால் உருவாகும் முத்திரைகளை இனம் காண வழிப்படுத்தல் .

- ♦ தேவையான மேலதிகப் பயிற்சியை வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- இரட்டைக் கை முத்திரைகளைச் சரியான உச்சரிப்புடன் முழுமையாக அபிநயித்துக் காட்டுவார்.

- அவற்றின் கருத்துக்களைக் கூறுவார்.

- ஒற்றைக் கை முத்திரைகள் இரண்டினைச் சேர்ப்பதால் உருவாகும் இரட்டைக் கை முத்திரைகளை இனம் காண்பார்.

- இரட்டைக் கை முத்திரைகளின் எண்ணிக்கையைக் கூறுவார்.

- இதன் மறுபெயரைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : பரதநாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : முத்திரைப் பிரயோகங்களையும் அடவுப் பயிற்சிகளையும் கிராமிய நடனங்களையும் அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.3.3** : கும்மி நடனத்தினை அபிநயிப்போம்.

**பாட வேளைகள்** : 03

**தர உள்ளீடு** : கும்மிப் பாடல் எழுதப்பட்ட அட்டை, காணொளி இறுவட்டுக்கள், தட்டுக்கழி, தட்டுப்பலகை

**கற்றற் பேறுகள்** :

- கும்மி நடனப் பாடலைப் பாடுவார்.
- கும்மி நடனத்தைக் கிராமியப் பாங்குடன் ஆடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு**

- ஒலி, ஒளி நாடாக்களைப் பார்வையிடச் செய்தல்.
- பாடல் எழுதப்பட்ட அட்டையையும் கும்மி நடனம் தொடர்பான படங்களையும் காட்சிப்படுத்துதல்.
- குறித்த கும்மிப் பாடலின் இராக, தாளத்தைக் கூறி இசையுடன் ஆசிரியர் பாட மாணவர் செவிமடுத்தல்.
- ஆசிரியர் பகுதி பகுதியாகப் பாடத் தொடர்ந்து மாணவர்கள் பாடுதல்.
- கைகளைக் கொட்டி மகிழ்ச்சியுடன் எளிய கிராமியச் சுவடுகளில் மாணவர்களை ஆட வழிப்படுத்தல்.
- கோலங்களில் ஆடுதல்.
- எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாக்குதல்.
- பயிற்சி அளிக்கப்பட்ட சுவடுகளை ஒழுங்காக ஆடச் செய்தல்.
- ஒரு குழுவினர் பாட மற்றைய குழுவினரை ஆடச் செய்தல்.
- இவ்வாறே மாறி மற்றைய குழுவினரும் ஆடுதல்.
- ஆடலில் ஈடுபடும் போது குழு ஒத்திசைவு, மகிழ்ச்சி, ஆடற்கோலங்கள், பிரவேசம், நிறைவு செய்தல் என்பன சரியான முறையில் ஆற்றுகைப் படுத்தப்படுகின்றதா என்பதை ஆசிரியர் கவனித்தல்.
- நன்கு செய்த குழுவினரைப் பாராட்டியும் விருத்தி செய்ய வேண்டியுள்ளோருக்கு மீள் பயிற்சியும் அளித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- கும்மிப்பாடலை இராக, தாளத்துடன் பாடுவார்.
- கும்மி நடனத்தைப் பல்வேறு கோலங்களில் ஆடி நிறைவு செய்வார்.
- கைகளைக் கொட்டி ஆடுவது கும்மி என்று கூறுவார்.
- கும்மிப்பாடலின் இராக, தாளத்தைக் குறிப்பிடுவா.
- குழுவினைப் பார்வையிட்டு விமர்சனத்தை முன்வைப்பார்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங் கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.6 :** தெய்வங்களுக்கும் கலைக்குமிடையிலுள்ள தொடர்பு பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள் :** 01

**தரஉள்ளீடுகள் :** தெய்வங்களின் திரு நடனப்படங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- இந்து சமயத்திற்கும் கலைக்குமிடையேயான தொடர்பினை விவரிப்பார்.
- தெய்வங்கள் திருநடனம் செய்த, வாத்தியம் இசைத்த கதைகளைக் கூறுவார்.
- எமது கலைகளின் உறைவிடம் தெய்வங்கள் என்பதை ஆராய்ந்தறிவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ தெய்வங்களின் திருநடனப்படங்களையும், சரஸ்வதிதேவி வீணையுடன் காட்சியளிக்கும் படங்களையும் காட்சிப்படுத்துங்கள்.
- ♦ கலைக்கும் இந்து சமயத்திற்குமிடையிலுள்ள தொடர்பை விபரிப்பார்.
- ♦ காட்சிப்படுத்திய விடயங்களைக் கலையுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- ♦ நடராஜப் பெருமானின் நடனத் தோற்றங்கள் 108 கரண சிற்பங்களாகத் திகழ்கின்றன.
- ♦ நர்த்தன கணபதி நடனம் ஆடிய போது சந்திரன் சிரிக்கச் சாபம் பெற்றுத் தேய்ந்து போன சம்பவத்தை விவரித்தல்.
- ♦ சிவன், பார்வதி நடனமாட சரஸ்வதி வீணை வாசித்தல்.
- ♦ கண்ணபிரான் காளிங்கன் என்னும் பாம்பினை அடக்கி நர்த்தனம் புரிந்த சம்பவத்தை விவரித்தல்.
- ♦ கலைகளுக்கும் கடவுளுக்குமிடையிலான தொடர்பை விளக்கும் கதைகளைத் தேடி அறிய வழிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- கலைக்கும் இந்து சமயத்திற்கும் இடையிலுள்ள தொடர்பை விவரிப்பார்.
- நடராஜப் பெருமானின் நடனத் தோற்றங்கள் எவை எனக் குறிப்பிடுவார்.
- கண்ணபிரான் நடனமாடிய சந்தர்ப்பம் ஒன்றைக் கூறுவார்.
- சிவன் - பார்வதி நடன சந்தர்ப்பத்தைக் கூறுவார்.
- கணபதியின் நடன சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** பரத நாட்டியத்தின் அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3 :** ''பரதம்'' என்ற பதத்தின் அடிப்படை அம்சங்களை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள் :** 01

**தர உள்ளீடுகள் :** விடய உள்ளடக்க அட்டை, பரத நாட்டியம் சம்பந்தமான படங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- பரதத்தின் தோற்றம் பற்றி அறிந்து கூறுவார்.
- பரதத்தின் முழுமுதற் கடவுளை அறிந்து கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ♦ பரதம் சம்பந்தமான படங்களைக் காட்சிப்படுத்திப், படங்களிற் பார்த்தவற்றையும், அவர்களின் முன் அனுபவங்களையும் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ பின்வரும் அம்சங்களை வழங்கித் தெளிவுபடுத்தல்.
    - பரதம் பாரத தேசத்தின் தமிழகத்திற்குரிய சாஸ்திரிய நடனமாகும்.
    - பரதம் எனும் சொல் பல பொருட்படுமாயினும் சிறப்பாகத் தமிழக சாஸ்திரிய நடனத்தைக் குறிக்கும்.
    - பரதத்தின் முழுமுதற் கடவுள் நடராஜப்பெருமான் ஆவார்.
    - பரதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நால் வேதங்களின் தொகுப்பாகும்.
- ♦ மாணவர்களுக்கு விடயங்களைச் சுருக்கக் குறிப்பாக எழுதுவதற்கு நேரம் ஒதுக்குங்கள்.
- ♦ விடய உள்ளடக்க அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பரதம் பாரத தேசத்தில் தமிழகத்திற்குரிய சாஸ்திரிய நடனமாகும் என்பதைக் குறிப்பிடுவார்.
- நான்கு வேதங்களின் தொகுப்பு என்பதைக் குறிப்பிடுவார்.
- பரதத்தின் முழுமுதற் கடவுள் நடராஜர் என்பதைக் கூறுவார்.
- நான்கு வேதங்களையும் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களையும், நாட்டடவிற்குரிய தாளத்தினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.4 :** நாட்டிய இலட்சணம் பற்றிய விளக்கத்தை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள் :** 01

**தர உள்ளீடு :** நாட்டிய இலட்சணம் எழுதப்பட்ட அட்டை

**கற்றற் பேறுகள் :** பாவம், இராகம், தாளம் என்பவற்றின் பொருளை அறிவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- ♦ தமிழகத்தின் சாஸ்திரிய நடனமான பரத நாட்டியத்தைப் பற்றியும் அது தொடர்பான முன் அனுபவங்களைப் பற்றியும் கலந்துரையாடுதல்.
- ♦ நாட்டிய இலட்சணங்களான பாவ, இராக, தாளங்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- ♦ நாட்டிய இலட்சணம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தல்.
- ♦ கீழ்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடுதல்.
  - ‘‘பாவம்’’ என்பது உள்ளத்தில் உந்தும் உணர்ச்சிகளை முகத்தினால் வெளிப்படுத்துவது ஆகும்.
  - ‘‘ராகம்’’ என்பது ஸ்வரக் கோர்வைகளினால் அலங்கரித்து ஆலாபனை செய்வது ஆகும்.
  - ‘‘தாளம்’’ என்பது பாட்டின் கால அளவைக் கையினாலோ அன்றேற் கருவியினாலோ தட்டுவது ஆகும்.
- ♦ பாவ, ராக, தாளங்கள் பிரமா, விஷ்ணு, ருத்திரன் ஆகியோரின் சொரூபமென பரதசேனாதிபதீயம் கூறுகின்றது.
- ♦ இவற்றுடன் மேலதிக தகவல்களும் வழங்கப்பட வேண்டும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- பாவம், இராகம், தாளம் என்றால் என்ன என்பதன் கருத்தைக் குறிப்பிடுவார்.
- இதனைப் பற்றி பரத சேனாதிபதியம் கூறும் கருத்தினைக் கூறுவார்.

தேர்ச்சி 5.0 : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 5.2 : கிராமிய நடனங்களைப் பற்றி அறிந்து கூறுவார்.

செயற்பாடு 5.2.2 : கும்மி, கோலாட்டம் ஆகிய கிராமிய நடனங்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

பாட வேளைகள் : 01

தரஉள்ளீடு : கும்மி, கோலாட்டம் தொடர்பான, காணொளி இறுவட்டு.

கற்றற் பேறுகள் :

- கிராமியக் கலைப்பாரம்பரியத்தை அறிந்து குறிப்பிடுவார்.
- கிராமியக் கலைசார் ஆக்கங்களின் நுட்பங்களை அறிந்து குறிப்பிடுவார்.
- கும்மி, கோலாட்டம் ஆகிய கிராமிய நடனங்கள் பற்றிக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

♦ கும்மி, கோலாட்டம் தொடர்பாகப் பார்வையிட்ட விடயங்களையும், அறிந்த விடயங்களையும் கொண்டு பின்வரும் விடயங்களில் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

**கும்மி நடனம்**

♦ கும்மி நடுத்தரச் சமூகத்தினரால் வயது வேறுபாடின்றிக் கைகளைத் தட்டி வட்டமாக நின்று ஆடப்படும்.

♦ கிராமப்புற உழவர்கள் மாரியம்மன், பகவதி அம்மன், முத்தாலம்மனை வேண்டி நடாத்தும் முளைப்பாரி என்னும் நிகழ்வில் கும்மி ஒரு முக்கிய நிகழ்வாக ஆடப்படும்.

♦ இது ஆண், பெண் இரு பாலாராலும் ஆடப்படும்.

♦ இதில் கைத் தட்டு, விரல் தட்டு, அஞ்சலித் தட்டு எனப் பலவகை உண்டு.

♦ இந்நடனம் பல்வேறு கால ஜதிகளுடன் ஆடப்படும்.

♦ இதற்குரிய பாடல்கள் மிகவும் சாதாரண ராகங்களில் அமைந்து "தானானே" என்னும் சந்தத்தில் பாடப்படும்.

♦ கிராமியக் கலாச்சார உடை இதன் போது அணியப்படும்.

♦ "முளைப்பாரி"யின் போது உறுமி மேளம் என்னும் வாத்தியக் கருவி பயன்படுத்தப்படும்.

### கோலாட்ட நடனம்

- ♦ கோல் கொண்டு ஆடுவதால் கோலாட்டம் எனப்படும்.
- ♦ நடுத்தரச் சமூகத்தினரால் வயது வேறுபாடின்றி வட்டமாக நின்று ஆடப்படும்.
- ♦ கோலாட்டத்தில் பின்னற் கோலாட்டம் எனும் ஒரு வகையுமுண்டு.
- ♦ இது ஆண் பெண் இரு பாலாராலும் ஆடப்படும்.
- ♦ இந்நடனம் பல்வேறு ஜதி வேறுபாடுகளுடன் ஆடப்படும்.
- ♦ இதற்குரிய பாடல்கள் உடைகள் என்பன கும்மி நடனத்திற்குரியதைப் போன்றே அமைந்திருக்கும்.

**குறிப்பு** - இவை தவிர மேலதிக விடயங்களும் வழங்கப்பட வேண்டும்.

### கணிப்பீடும் மதிப்பீடும்.

- கிராமியக் கலைப் பாரம்பரியத்தைப் பற்றிக் குறிப்பிடுவார்.
- கும்மி, கோலாட்டம் ஆடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
- இவற்றின் ஆட்ட முறைகளையும், இசையையும் குறிப்பிடுவார்.
- இந்நடனங்களிற்குப் பயன்படுத்தப்படும் ஆடைகளைப் பற்றிக் குறிப்பிடுவார்.
- கோலாட்டத்தின் இன்னொரு வகை பற்றிக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 5.0 :** நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கூறுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.4 :** இலங்கையின் சமய விழாக்களின் பின்னணியை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.4.1 :** பன்னிரு மாதங்களிலும் இடம்பெறும் இந்து சமய விழாக்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடு :** பன்னிரு மாதங்களும், விழாக்களும் எழுதப்பட்ட அட்டை, விழாக்களின் படங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- இந்து சமய மக்களால் தொன்றுதொட்டு கொண்டாடப்படும் விழாக்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- பன்னிரு மாதங்களிலும் இடம் பெறும் சமய விழாக்களின் சம்பவப் பின்னணிகளைப் புரிந்து கொள்வார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

- ♦ இந்து சமய விழாக்களின் படங்களைக் காட்சிப்படுத்துதல்.
- ♦ காட்சிப்படுத்தப்பட்ட விழாக்களைப் பற்றியும் அவற்றின் நோக்கம் பற்றியும் கலந்துரையாடுதல்.
- ♦ இந்து சமய மக்களால் தொன்று தொட்டு சமய சமூக விழுமியங்களை வெளிப்படுத்தும் முகமாகக் கொண்டாடப்படுபவையே விழாக்கள் எனக் குறிப்பிடுதல்.
- ♦ விழாக்கள் கொண்டாடப்படுவதற்கான விளக்கங்களையும், கதைகளையும் குறிப்பிடுதல்.
- ♦ அவ் விழாக்கள் சம்பந்தமாகக் கிடைக்கக்கூடிய படங்களைச் சேகரித்து வெளிக்கள கொப்பியில் ஒட்டுவதற்கு வழிப்படுத்தவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- பன்னிரு மாதங்களிலும் கொண்டாடப்படும் சமய சம்பந்தமான விழாக்களைக் குறிப்பிடுவார்.
- இந்துக்களால் தொன்றுதொட்டு கொண்டாடப்படும் விழாக்கள் சம்பந்தமான கதைகளைச் சுருக்கமாகக் கூறுவார்.
- விழாக்கள் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- விழாக்களின் நோக்கங்களைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கூறுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.4** : இலங்கையின் சமய விழாக்களின் பின்னணியை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.4.2** : சிங்கள மக்களின் பாரம்பரிய சமய விழாக்களில் ஒன்றான அசல பெரஹராவின் அடிப்படை அம்சங்களை அறிந்து கொள்வோம்.

**பாட வேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** : அசலபெரஹரா சம்பந்தமான படங்கள், அசல பெரஹரா தொடர்பான இறுவட்டு.

**கற்றற் பேறுகள்** :

- சிங்கள மக்களின் பாரம்பரிய விழாக்களில் ஒன்று அசல பெரஹரா எனக் குறிப்பிடுவார்.
- அசல பெரஹரா தலதாமாளிகையுடன் தொடர்புடையது எனக் கூறுவார்.
- அசல பெரஹராவில் இடம்பெறும் கிராமியக் கலைகளைக் கூறுவார்.
- சிங்கள மக்களின் பாரம்பரிய விழாக்களில் தமிழ்க் கிராமியக் கலைகளும் இணைந்துள்ளது என்பதை அறிந்து விளக்குவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு** :

- ♦ சிங்கள மக்களின் நடனங்கள் தொடர்பாக மாணவரின் முன்னனுபவங்களைப் பற்றிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- ♦ அசல பெரஹரா சம்பந்தமான படங்களையும் காணொளி, இறுவட்டினையும் பார்வையிடச் செய்தல்.
- ♦ பார்வையிட்ட அனுபவங்களைக் கொண்டு கலந்துரையாடுதல்.
- ♦ புனிதப் பேழையில் யானைத் தந்தங்கள் வைக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு வரப்படும்.
- ♦ ஊர்வலத்தின் போது கோலாட்டம், கும்மி, செம்பு, பொய்க்கால் நடனம், சுளகு நடனம், உலக்கை நடனம், தீப்பந்தாடல் போன்ற பல்வேறு நடனங்களை ஆடி வருவார்கள்.
- ♦ அசல பெரஹராவில் இடம்பெறும் கிராமிய நடனங்கள் தொடர்பான படங்களைச் சேகரித்து பயிற்சிப் புத்தகத்தில் ஒட்டுவதற்கு வழிப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- ஆடி, ஆவணி மாதங்களிலும் தலதா மாளிகையிற் கொண்டாடப்படும் அசலபெரஹரா பற்றிக் குறிப்பிடுவார்.
- பெரஹராவின் போது யானையில் புனிதத் தந்தம் பேழையில் வைத்துக் கொண்டு செல்லப்படும் என்பதைக் கூறுவார்.
- ஊர்வலத்தின் போது கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெறும் என்பதைக் கூறுவார்.
- அவற்றில் இடம்பெறும் கிராமியக் கலைகளைக் குறிப்பிடுவார்.
- சிங்கள மக்களின் பாரம்பரிய விழாக்களின் தமிழர் கிராமியக் கலைகளும் இணைந்துள்ளதைக் குறிப்பிடுவார்.